SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram :
"GUARDIAN" JAFFNA.

Telephone : No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

74-ம் புத்தகம் 21-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆனி மாசம் 2-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## கத்தோலிக்க மக்களின் பொறுப்புகள்

தற்காலஉலகை மனந்திருப்பும்வேலையில் திருச்சபையானது குருமாரோடு ஒத்துழைப்பதற்கு விசுவாசிகளை மேன்மேலும் வேண்டிநிற்கின்றதைக் காணுவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆதிநூற்றுண்டுகளில் நம்முன்னோர் குருமார் மேய்ப்பரும் விசுவாசிகள் மந்தையும்என்ற உவமையை எழுத்துப்பிரமாணமளவில் அர்த்தப்படுத்திவந்தனர். விசுவாசிகள் செம்மறிப்புருவைகளைப்போல அடக்கமும் கீழ்ப்படிதலுமுள்ளவர்கள்என்று மாத்திரமல்ல, செம்மறிகளைப்போல் புத்திக்கூர்மையிலும் ஒன்றைப்புதிதாக ஆரம்பிக்கும் வல்லமையிலும் குறைந்தவர்களெனக் கருதப்பட்டுவந்தனர். இக்காலத்தில் ஆண்டவருடைய வேலையை ஆற்றுவதற்குப் போதிய குருமாரில்லை. ஆனால் குருமார் முற்காலத்துச்செய்துமுடித்தவேலையில் பெரும்பகுதியை விசுவாசிகள் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

உதாரணமாகச் சத்தியவேதத்தை அறியாதோருக்கு அவ்வேதத்தை விசுவாசிகளில் படித்தவர்களாயுள்ளோர் தங்கள்போதனையாலும் சாதனையாலும் அறிவிக்கலாம். இப்படிப்பட்ட அலுவலை ஒருவிதத்தில் குருமார்செய்வதிலும்பார்க்க விசுவாசி ஒருவன் விசேஷமாகச் செய்யலாம். குருமார் வேதத்தைப் போதிக்கும்பொழுது அவர்கள்தங்கள் உத்தியோகமுறைக்கேற்ற ஊழியத்தைப்புரிகிறார்கள்என்று சொல்லக்கூடும். வேதத்தைப்பரப்பும்வேலையில் குருமாருக்கு உதவிபுரியச் சாதாரண கத்தோலிக்கர் வேண்டப்படுகிறார்கள்என்பது 1890-ம் ஆண்டு தைமாதம் 10-ந்திகதி வெளியான "சாப்பியென்சியே கிறிஸ்தியானியே" என்னும் மகுடநாமம்பெறறதும், "கிறீஸ்தவஅறிவு" என்னும் அர்த்தங்கொண்டதுமான பாப்பரசாது நிருபம் அறியத்தருகின்றது.

1890-ல் இருந்ததிலும்பார்க்கத் தற்காலத்தில் உலோகாதாய சம்பந்தங்கொண்டதும்கிறீஸ்துவத்துக்குவிரோதமானதுமான போதனைகளைக் கண்டிக்கும் தேவை அதிகரித்துள்ளது. அக்காலத்தில் அவநம்பிக்கைவளருகின்றதேஎன்ற பயம்மாத்திரம் இருந்தது. இக்காலத்திலோ அப்பயமானதுமுற்றி அவநம்பிக்கையின் கனிகளாகிய வேதவிரோதக் கிருத்தியங்களை நாலாபக்கங்களிலும் காண்கின்றோம். ஆசியா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் பெரும்பாகம் வேதவிரோதிகளால் ஆளப்பட்டுவருகின்றது. வேதவிரோதிகளால் ஆளப்படாதபகுதிகளிலும் அரைவாசித்தொகையினர்தாமும் சரியான தேவஅறிவைப் பெற்றுள்ளார்களோஎன்பது சந்தேகம். இந்நிலைமை பயங்கரத்துக்குரியதே. சர்வேசுரனுடைய விசேஷ உதவி நமதுபக்கத்தில் இல்லாவிடில் இந்நிலைமை மிகவும் மோசமானதென்றே கூறவேண்டும்.

### உலோகாதாய மதம்

விஞ்ஞானசாஸ்திரத்தைப்பற்றியதப்பான விளக்கமும் உலோகாதாயமதத்தின்வளர்ச்சியுமே இந்நிலைமைக்குக் காரணமென்று கூறலாம். விஞ்ஞானமுறைப்படி விளங்கிக்கொள்ளக்கூடாத எதுவும் பாட்டிகதையும் மூடநம்பிக்கையுமாகுமென்றே உலோகாதாயவாதிகள் சாதிக்கின்றனர். உதாரணமாக அவர்கள் மனித ஆன்மாவுக்குப்பதில் மனிதமூளையையும், தேவனுக்குப்பதில் இயற்கைவிதிகளையும், நன்னெறிக்குப்பதில் சமயோசிதநடக்கையையும் கைக்கொள்ளுகின்றனர். இப்பொழுது மனிதஎண்ணங்களும் யோசனைகளும் புதுமுறையிலே இயங்குகின்றன. அக்காலத்தில் இருந்ததுபோன்ற ஞானஉரைகல்லில் தமதுஎண்ணங்கள் நடைமுறைகளைப் பரிசோதியாது பொருள்சேர்க்கும் உரைகல்லில் தமது யோசனைகளையும் கிருத்தியங்களையும் சோதித்துப்பார்க்கின்றனர். இவ்விதமனப்பான்மைக்கொப்பவே பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், புத்தகங்களும் பேசும்படங்களும், விளம்பரங்களும், அரசியல்கொள்கைகளும் வெளியாகின்றன. இந்நாட்களில் வழங்கும் பாஷையும் புதுமோடியிலே வழங்குகின்றது. திருச்சபையின் எண்ணங்களும் பேச்சும் இக்காலத்தில் கர்நாடகமாக் பழயமோடியாக ஒருவித இகழ்ச்சியோடு கருதப்படுகின்றது. நவீன நாகரீகச்செவிகளில் அவை நளினமாக ஒலிக்கின்றன.

ஆகவே இவை கிறீஸ்தவர்களதும் விசேஷமாகக் கத்தோலிக்காதும் விசுவாசத்தை மிகவும் உரமாகத் தாக்குகின்றன. "ஞானஉலகமே கர்நாடகம்" என்று கருதுகிறவர்கள் கத்தோலிக்கருடைய போதனையைக் கேட்டமாத்திரத்திலேயே தோளைச்சுருக்கி, "என்ன மூடத்தனம்!" என்று கூறுவார்போல் குறுநகை பூர்க்கின்றனர். கத்தோலிக்கருடைய போதனை ஒருவேளை மனோதத்துவசாஸ்திரிகளுக்கும் மனுக்குலவளர்ச்சி ஆராய்ச்சியாளர்க்கும் பயன்படலாமேயன்றி நம்போன்ற நவநாகரீகப் புதுமனிதர் அதைக் கிஞ்சித்தேனும் சிந்திக்கலாகுமாவென நகையாடுகின்றனர்.

இவ்வண்ணம் கத்தோலிக்க விசுவாசம் எப்பொழுதுமே பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. உத்தம விசுவாசத்தில் உறுதிகொண்டு தத்தம்விசுவாசத்துக்கு இடையூறனவைகளை விலக்கி நடக்கும் கத்தோலிக்கரும் தத்தம் விசுவாசத்துக்கு விரோத

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## சத்தியங்கண்ட சமுசயவாதி

[எஸ். பி. ஜேம்ஸ் பேர்னண்டோ]

[அமெரிக்காவில் வெளிவரும் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற பிரபல பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர் புல்டன் அவ்ர்ஸ்லர் (Fulton Ourseler). மதசம்பந்தமான கட்டுரைகள், கதைகள் சேகரித்து, அப்பத்திரிகையில் வெளியிடுவதுடன், தாமும் அவ்வப்போது சிறந்த கட்டுரைகளும் கதைகளும் எழுதிவருகின்றார். இப்பொழுது மதசம்பந்தமான இலக்கியங்களில் தனிப்பற்றுக்கொண்டுள்ள புல்டன், பல வருடங்கள் மதநம்பிக்கையற்றவராகவே இருந்தவர். சமுசயவாதியாக இருந்தஅவர் கத்தோலிக்கு மதத்தைத் தழுவியது சுவைமிக்கதோர் வரலாறாகும்.

புல்டன் அவர்ஸ்லர் அமெரிக்காவிலுள்ள பால்ரிமோர் என்ற நகரில் 1893-ம்ஆண்டு தைமாதம் 23-ந்தேதி பிறந்தார். அவரது பெற்றோர் பப்ரிஸ்ட் என்ற புரொட்டெஸ்டாந்த மதத்தைச் சேர்ந்தவர்கள். புல்டன் தமது 10-வது வயதில் பப்ரிஸ்ட் மறைப்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். இளம்வயதிலேயே தம்கல்வியை முடித்துக்கொண்ட இவர், இருவருடங்கள்தொடர்ந்து படித்து சட்டசாஸ்திர படிப்பிலும் தேர்ச்சிபெற்றார். பின் "அமெரிக்கன்" என்ற பத்திரிகையின் நிருபராகசிலவருடங்கள் வேலைபார்த்தார். அந்த வேலையிலிருந்துகொண்டே சங்கீத சாஸ்திரத்தையும் கற்றுப் பின் சங்கீத விமரிசகராகவும் 'மியூசிக் டிரேட்ஸ்' என்றபத்திரிகையின் ஆசிரியராகவுமிருக்க நியூயோர்க் நகர்வந்துசேர்ந்தார்.

அவர் அங்கு பல பத்திரிகைகளின் உதவி ஆசிரியராகவும் இருந்துவந்தபின் தமது 38-வது வயதில் 'லிபர்டி' என்ற பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்தார். பத்திரிகைத் தொழிலைக் கவனித்துக்கொண்டே புல்டன் 10 சிறந்த நாவல்களும், ஆறு துப்பறியும், நாவல்களும் இருவாழ்க்கை வரலாறுகளும் எழுதிமுடித்தார். இவர் எழுதிய துப்பறியும் நாவல்கள் வாயிலாகச் சமூகத்தின் பல ஊழல்களை வன்மையாகக் கண்டித்தார். சமூகத்தில் பரவிக்கொண்டுவந்த கொலை, களவு, விபசாரம் முதலிய குற்றங்களை வேருடன் களைந்தெறிய அவர் பேனாவீரராக மட்டுமல்ல, சேவாவீரராகவும் தொண்டாற்றினார். கொலைக்குற்றவாளிகள் பலரைக் கண்டுபிடிக்க பொலிஸ் அதிகாரிகளுக்கு புல்டன் பெரிதும் உதவினார். இவரது முயற்சியால் 300 குற்றவாளிகள் கைப்பற்றப்பட்டனர். புல்டன் ஒருநாடக ஆசிரியருமாவர். இவர் எழுதிய 'சிலந்தி' என்ற நாடகம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலுமுள்ள எல்லா நாடகமேடைகளிலும் நடித்துக் காட்டப்பட்டது.

இலக்கியஉலகில் பெருமையும் புகழும் அடைந்துகொண்டுவந்த புல்டன் ஆத்மீகஉலகை அறவே மறந்தார். தாம் இளமையில் கடைப்பிடித்துவந்த பப்ரிஸ்ட் மதக் கொள்கையையும் கைவிட்டார். அப்பொழுது இவர்இருந்துவந்தநிலைமையைப்பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "சுமார் 35 வருடங்கள் நான் எம்மதத்திலும் நம்பிக்கையற்றவனாய் இருந்தேன். யேசுநாதர் என்ற ஒருவர் வாழ்ந்துவந்தாரென்பதை நான் நம்பவில்லை. கிறீஸ்துநாதரை அழகியதோர் கற்பனையில் உருவான மனிதராகவே கருதியதுடன், கிறீஸ்துமதமானது கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொண்டதெனவும் அபிப்பிராயங்கொண்டிருந்தேன்."

எனவே மதம் அவரது வாழ்க்கைக்குப் புறம்பானதோர் விஷயமாக இருந்துவந்தது. இலக்கியத்துறையிலேயே தம்கருத்தையும் கவனத்தையும் செலுத்தித் தொடர்ச்சியாகஏராளமான நூல்களை எழுதினர். பத்துவருட அயராத உழைப்பிற்குப் பின், சிலகாலம் ஓய்வுஎடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. ஓய்வுநாட்களை உல்லாசப் பிரயாணத்தில் கழிக்கவிரும்பி, மத்தியதரைக்கடல் பிரதேசங்களைப் பார்வையிடுவதெனத் தீர்மானித்தார்.

பின், பிரயாணத்திற்குவேண்டிய சகல ஏற்பாடுகளும்செய்துகொண்டு 1935-ம்ஆண்டு மாசிமாதம் தமது மனைவியுடனும் இருகுழந்தைகளுடனும் நியூயோக்கில்கப்பலேறினர். மடெய்ரா, கஸ்பிளான்கா, ஜிப்ரால்றர், நேப்பிள்ஸ், ரோம், ஏதென்ஸ் முதலிய இடங்கள் வழியாக கொன்ஸ்தாந்திநோப்பிளை அடைந்தார். அங்கிருந்து சித்திரைமாதம் ஹய்பாவிற்குக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### சமயச்சுதந்தரமும் நேருவும்

"இந்தியாவிலுள்ள கிறீஸ்துவ சபைகளின் எதிர்கால நிலைமை எத்தகையதாயிருக்கும்?" என்று சுவிற்செர்லாந்து தேச ஜெனிவாநகரில் ஒருவர் பண்டித நேருவைக் கேட்டபோது அவர் பின்வருமாறு பதில் அளித்தார்.

"இந்திய அரசாங்கம் முற்றிலும் சமயச் சார்பற்ற அரசாங்கம். எல்லாச் சமயங்களுக்கும் அது பூரண சுதந்தரம் அளிக்கிறது. இந்தியாவில் மிகப் பெரும்பான்மையினர் இந்துக்களாக இருந்தபோதிலும் எந்தத் தனிப்பட்ட சமயத்திற்கும் இந்திய அரசாங்கம் விசேஷ சலுகைகள் காட்டுவதில்லை. துரதிஷ்ட வசமாக, சமயத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தியா துண்டிக்கப்பட்டபோதிலும் இப்பொழுதுகூட மூன்றரைக் கோடி முஸ்லீம் மக்கள் வசிக்கின்றனர். ஏராளமான கிறீஸ்துதர்களும் பௌத்தர்களும் இந்தியாவில் இருக்கின்றனர். சுவிற்செர்லாந்தில் எவ்வளவு கத்தோலிக்கர் இருக்கின்றனரோ அவ்வளவு கத்தோலிக்கர் இந்தியாவில் வசிக்கின்றனர்."

### பெல்லாரி புது மேற்றிராணியார்

வைகாசிமாதம் 4-ந்தேதியன்று, லண்டனில் பிரான்சீஸ்குசபைக் குருக்களின் பார்வையில் இருந்துவரும் அர்ச். அந்தோனியார் கோயிலில் மொன்சிஞ்ஞோர் ஜோண் பாரெஸ்ட் ஹோகன் சுவாமிகள், இங்கிலாந்தில் அப்போஸ்தொலிக்குப் பிரதிநிதியாக இருந்து வரும் மகாவந். கோத்பிரே ஆண்டவரவர்களால் மேற்றிராணியாராக அபிஷேகம் பண்ணப்பெற்றார். இவர் பெல்லாரியின் முதல் மேற்றிராணியாராக இருப்பார். மகாவந். ஹோகன் ஆண்டவரவர்கள் இந்தியாவில் ஏறக்குறைய 20 வருஷம் மிஷனரிய சேவைபுரிந்து வந்துள்ளார். பழைய பெல்லாரி மிஷனில் 15 வருடகாலம் சிரேஷ்டராக நிர்வாகம்புரிந்து வந்துள்ளார்.

### நன்றியறிந்த தோத்திரதினம்

வருடத்திற்கொருநாள் தேவனுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடப்படவேண்டுமென்றுகோரி பிறேசில் கத்தோலிக்கு சேவாசங்கமாதர் தீவிர பிரசாரம் செய்துவந்ததன் பயனாக, கார்த்திகை மாதக்கடைசி வியாழக்கிழமை ஓர்தேசிய நன்றியறிந்த தோத்திர தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமென்ற பிரேரணை பிறேசிலிய சட்டசபையால் நியமிக்கப்பட்ட உபசபையாரில் நிறைவேறியது. அடுத்தசட்டசபைக்கூட்டத்தில் அந்தப் பிரேரணை உத்தியோகமுறையில் பிரேரேபிக்கப்பட்டுச் சட்டமாகும். றியோ தே ஜனெய்ரோ அதிமேற்றிராணியாராகிய கருதினால் ஜேம்ஸ் பரேஸ் கமாரு ஆண்டவரவர்கள் இத்திட்டத்திற்கு பூரண ஆதரவு அளித்துவந்தார்.

### பாப்பரசர் பேட்டி

பம்பாய் நகரசபைத் தலைவராகிய திரு. எஸ். கே. பட்டில் வைகாசி 11-ந் திகதியன்று பாப்பாண்டவரைப்பேட்டி கண்டு 20 நிமிஷம் பேசிக்கொண்டிருந்தார். பரிசுத்த தந்தையவர்கள் இந்தியாவுக்கு விசேஷ ஆசீர்வாதத்தை அளித்ததாகவும், இந்தியாவைப்பற்றிப் பல விபரங்களை விசாரித்ததாகவும் திரு. பட்டில் தெரிவிக்கிறார்.

### புதிய அர்ச்சியசிஷ்டர்

பதினாறும் நூற்றாண்டில் 'யேசு சபைக் கன்னியர்' சபையை அடியிட்டவரான முத்திப்பேறுபெற்ற ஜூான் தெலெஸ்தொனுக் அம்மையாருக்கு மே 15-ந்திகதியன்று ரோமாபுரியில் அர்ச். இராயப்பர் ஆலயத்தில் அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்கப்பட்டது. இவ்வம்மையார் பிரபல பிரெஞ்சு எழுத்தாளராகிய மேர்ன் தேஞ் என்பவரின் மருமகள்.

## பொதுவர்த்தமானம்

### இராட்சத தூரதிருஷ்டிக் கண்ணாடி

அமெரிக்க விஞ்ஞானிகள் கலிபோர்னியாவிலுள்ள பலர்மோர் அவதான நிலையத்தில் ஒரு பிரமாண்டமான தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பொருத்தியிருக்கிறார்கள். இதுகாலவரை மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் அவதானித்த தூரத்தைப்போல் இரண்டு மடங்கு தூரத்தை இந்தப் புதிய இராட்சத கண்ணாடியினால் அவதானிக்க முடிகிறது. இந்தத் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு அவதான நிலையத்தைச் சேர்ந்த டக்றர் எட்வின் பி. ஹப்பிள், சூக்ஷும நட்சத்திரக் கூட்டமொன்றைப் படம் பிடித்திருக்கிறார். இந்த நட்சத்திரக் கூட்டம் ஒருகோடி ஒளிவருட தூரத்திலிருக்கிறது. ஒரு ஒளிவருட தூரமென்பது விநாடிக்கு 1,86,000 மைல் வீதம் பிரயாணம் செய்யும் ஒரு ஒளிக் கிரணம் ஒரு வருடத்தில் பிரயாணம் செய்யக்கூடிய தூரமாகும்.

மற்றும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளினால் பார்த்தபோது சூனியமாகக் காணப்பட்ட ஒரு இடத்தை நோக்கி இந்த 200 அங்குல இராட்சதக் கண்ணாடியைக் குறிவைத்தார் டக்றர் ஹப்பிள். அந்த நிலையில் பிடிக்கப்பட்ட புகைப்படத்தில் ஊசி நுனிபோன்ற ஒளிப் புள்ளிகள் காணப்படுகின்றன. இதைப்பார்த்த வானசாஸ்திரிகள் இந்தப் புள்ளிகள் பூமியிலிருந்து கோடா கோடி மைல் தூரத்துக்கப்பாலுள்ள நட்சத்திரங்களைக் குறிக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அத்தோடு 20 நீண்ட வருடங்களாகப் பாடுபட்டுத் தயாரித்த இந்தத் தூரதிருஷ்டிக் கண்ணாடியும் எதிர்பார்த்தபடி வெற்றியளித்துவிட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு கோடி ஒளிவருடத் தூரத்திற்கப்பால்கூட இந்த நட்சத்திர கணங்களுக்கு ஒரு முடிவும் இருப்பதாகத் தெரியவில்லை. நட்சத்திர மண்டலம் எங்கோ ஒரு தூரத்திற்கப்பால் வரைவாக முடிவடைகிறதென்றும் அதற்கப்பால் ஏகப் பெரு வெளியிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் அந்த ஏகப்பெருவெளி ஆரம்பிக்கும் எல்லை ஒரு கோடி ஒளிவருட தூரத்துக்கு இப்பால் கிடையாதென்பது மேற்படி புகைப்படத்தால் முடிவாகிவிட்டது. அந்தப் புகைப்படத்திலிருந்து இன்னொரு விஷயம் தெளிவாகிறது. அதாவது, இந்த உலகந் தோன்றிய நாள்முதல் தோன்றிய மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நட்சத்திரம் வீதம்வைத்துப் பார்த்தாலும் நட்சத்திரத்தின் தொகை அதிகமாயிருக்கும் என்பதுதான். ஒவ்வொரு சூக்ஷும நட்சத்திரக் கூட்டத்திலும் 10,00,00,000 நட்சத்திரத்திற்குமேல் இருப்பதாக உத்தேச ரீதியில் கணக்கப்படுகிறது.

### மின்சார மூளைகள்

தற்போது மிகவும் சிக்கலான கணக்குகளைச்செய்வதற்கு அதாவது பெருந் தொகையான இலக்கங்களைக் கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்து மறுமொழி காண்பதற்கு மின்சார யந்திரங்கள் கையாளப்பட்டு வருகின்றன. இந்த யந்திரங்களைக்கொண்டு விமானங்களைச் செலுத்தவும், டெலிவிஷன்களை இயக்கவும், காலநிலையைக் கணிக்கவும் செய்துவிடலாமென்றும், அப்படிச் செய்யக்கூடிய காலம் அதிக தூரத்திலில்லையென்றும் தெரியவருகிறது. சமீபத்தில் நியூயோர்க் நகரில் கூடிய அமெரிக்க மின்சார எஞ்சினீயர்களின் கழகத்தில் இது சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெற்றன. அத்தகைய யந்திரங்கள் சாதாரண மனிதனைவிட 10,00,00,000 மடங்கு அதிக வேகத்தில் எவ்வளவோ நுட்பமான தொழில்களைச் செய்துவிட முடியுமாம். இத்தகைய யந்திரங்கள் "மின்சார மூளைகள்" என்று கூறப்படுகிறது.

## புதிய ஆசனக்கோவில் திருப்பணி நிதி

புதிய ஆசனக்கோவில் திருப்பணி நிதிக்கு 25 ரூபாவும், அதற்கு மேலும் உபகரிக்கப்பட்டவை வருமாறு:

| | ரூ. ச. |
|---|---|
| 13-ம் நோவனைகாரர் | 50-00 |
| ஏ. ஏ. சாமுவேல்ஸ் | 75-00 |
| ஏ. லாசறஸ் | 25-00 |
| கோவிற்கட்டிடபணியாளர் | 36-00 |
| சந்தியோகுமையோர் கோவில் (சில்லாலை) | 100-00 |
| அர்ச். தொம்மையப்பர்கோவில் (மாதகல்) | 200-00 |
| அர்ச். அந்தோனியார்கோவில் (மாதகல்) | 100-00 |
| பருத்தித்துறை வி. ப. (1-ம் பகுதி) | 200-00 |
| எஸ். சி. லோறன்ஸ் | 50-00 |
| வி. துரையப்பா | 25-00 |
| எம். அருளானந்தம் | 25-00 |
| எவ். எம். பாலசிங்கம் | 25-00 |
| [illegible]ஸ். பேர்சி ஜோண் தபப்ரிஸ்ற் | 25-00 |
| எ[illegible] இராயப்பு | 25-00 |
| எஸ். வெலிச்சோர் பீரிஸ் | 25-00 |
| அச்சுவேலி வி. ப. | 500-00 |
| அர்ச். சூசையப்பர்கோவில் (ஊர்காவற்றுறை) | 47-73 |
| [illegible]ரிசுத்ததேவமாதாவின்கோவில் (ஊர்காவற்றுறை) | 163-00 |
| சந்தியோகுமையோர்கோவில் (ஊர்காவற்றுறை) | 71-50 |
| அர்ச். அந்தோனியார்கோவில் (ஊர்காவற்றுறை) | 100-00 |
| அர்ச். தொம்மையப்பர்கோவில் (எழுவைதீவு) | 25-00 |
| ஆசிரியகலாசாலை மாணவ-மாணவிகள் (கொழும்புத்துறை) | 1000-00 |
| சந்நீக்கிலார்கோவில் (படையாட்சியர், நாவாந்துறை) | 200-00 |
| பரிசுத்த பரலோகமாதா கோவில் (நாவாந்துறை) | 500-00 |
| யாழ்ப்பாண மேற்றிராசன ஆசிரியர்கள் | 1000-00 |
| யாழ்ப்பாணமேற்றிராசன ஆசிரியைகள் | 694-00 |
| மிஸ். பெயாற்றிஸ்ஹெறாம்ஸ் | 25-00 |

(தொடரும்)

P. T. யேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரு.

### ஸ்ராலினின் மகன்

ரூஷிய சர்வாதிகாரியான ஸ்ராலினின் புதல்வரான வாசிலி சோவியற்றின் உதவிச்சர்வாதிகாரியான மாலற்றோவின்புத்திரியான ஸ்வெற்லானாவை மணஞ்செய்வாரென்று ரூஷியப் பத்திரிகையான 'ஸ்டார்' கூறுகிறது. ஸ்வெற்லானாவைப்பற்றி அது கூறுவதாவது: அவளுக்கு வயது 20. கறுப்புநிறம். பருமனானவள். உண்மையான ரூஷியப்பெண்ணின் தோற்றமுடையவள். அவள் ஒரு ரூஷியப்பொதுவுடைமைவாதி. ஆனால் மேற்கு நாடுகளின் கொள்கைகளைத் தெரிந்திருப்பதுமன்றி அவற்றில் விருப்பமுமுள்ளவள். ஸ்ராலினின் மகனான வாசிலி ரூஷிய ஆகாயப் படையில் மேஜர் ஜெனறலாக இருக்கிறார்.

—இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள கப்பல்கட்டும் தொழிற்சாலைகளுக்கு ஆலோசகராக இந்தியா அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள திரு. புறெலி, இந்தியா அரசாங்கத்தாரால் இயந்திரத் தொழில் பகுதித் தலைவர் திரு. பி. எல். குமார், பம்பாய் அரசாங்கத்தில் தொழில்பகுதித் தலைவர் திரு. பி. எச். டலால் ஆகியவர்களுடன் கார்வார், பாத்கல் முதலியவிடங்களைத் தரிசித்தார். அவர்கள் அடுத்த மாதத்தில் கொச்சியையும் தரிசிப்பார்கள்.

## தலைவில்லு பெரிய சந்தனமாதா திருநாள் அறிக்கை

இவ்வருஷம் ஆடி மாதம் 24-ந் திகதியிலும், 31-ந் திகதியிலும், தலைவில்லு பெரிய சந்தனமாதா திருநாள் மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படும்.

பெரிய சந்தனமாதாவின் பக்தர்கள் இத்திருவிழாக்களுக்கு வந்து பெரிய சந்தனமாதாவின் வல்லமை நிறைந்த ஆசீர்வாதத்தைப்பெற்று ஆத்தும சரீர நன்மைகளை அநுகூலமாக அடைந்து செல்வார்களாக.

தலைவில் சந்தனமாதாவின் நூறும் வருட ஜூபிலி உற்சவம் 1950-ம் வருடம் ஆடிமாதம் 30-ந் திகதி நடைபெறும். சந்தானாளின் பதியைச் சிறப்பிக்க சகல முஸ்திப்புகளும் நடைபெறுகின்றன. அன்புகூர்ந்து பொருள், பண உபகாரம் புரிய, அன்னவவின், பக்தகோடிகளே, முன்வாருங்கள்.

Sgd, Rev. Fr. ARTHER,
Martin Fernando
Administrator.

St. Anna's
Talawila,
Ettalai, 26-5-49.

## அர்ச். தேவமாதாவின் சபை

1949-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு கொழும்பு மேட்டுத் தெரு கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. S. மனுவேற்பிள்ளை என்பவரின் தலைமையின் கீழ், கொழும்பு கொட்டாஞ்சேனை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த பரிசுத்த தேவமாதாவின் சபை ஆரம்பமாகித் தன் சபைக்குரிய உத்தியோகஸ்தர்களைத் தெரிவுசெய்துகொண்டது.

M. C. JOVAN,
கௌரவ காரியதரிசி.

90/7 புதுசெட்டித்தெரு,
கொழும்பு.

## விண்ணப்பம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள பின்னாற் குறிக்கப்படும் வேலைகளைச் செய்வதற்கு வடமாகாண ஏஜண்டரவர்கள் 1949-ம்ஆண்டு யூன் மாதம் 14-ந்தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

1. பச்சிலைப்பள்ளி—கரைச்சிப் பகுதியிலுள்ள நிவில்குளம் திருத்துவதும்
2. வலிகாமம் மேற்குப்பகுதி சுளிபுரத்திலுள்ள வெள்ளாளக்கிராய் குளம் தொடங்கி கடல்மட்டுமுள்ள வாய்க்கால் திருத்துவதும் இரண்டு கொங்கிறீற் அணைகட்டுவதும்
3. வலிகாமம் மேற்குப்பகுதி சண்டிலிப்பாயிலுள்ள கோவில் குளக்கட்டும், வாய்க்காலும், திருத்துவதற்கும், ஓர் கொங்கிறீற் அணை கட்டுவதற்கும்
4. வலிகாமம் மேற்குப்பகுதி சண்டிலிப்பாய்க் குளக்கட்டும், வாய்க்காலும் திருத்துவதற்கும், ஓர் கொங்கிறீற் அணைகட்டுவதற்கும்

மேற்சொன்ன ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறாக விண்ணப்பஞ் செய்யவேண்டும். குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா இருபத்தைந்து கச்சேரியிற்கட்டி வடமாகாண ஏசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு பத்திரமாக 1949-ம் ஆண்டு மே மாதம் 28-ந்திகதி சனிக்கிழமைபகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்களை வடமாகாண ஏசண்டரிடம் பெற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அதிர்ஷ்டம்

உபாத்தியாயர் அம்பலவாணருடைய வீட்டிற்கு அடுத்ததுதான் என்னுடையதோட்டம். அவருடைய முற்றத்தைக் கடந்தே நான் தோட்டத்திற்குப் போய்வருவது வழக்கம். ஒரு நாள் நடுமத்தியானமாகவில்லை. என்னோடு வேலைசெய்த இராசுவும் ஏதோ ஒரு அலுவலாக வந்துகொண்டிருந்தான். வீட்டுத்தாழ்வாரத்தில் உபாத்தியாயருடைய குழந்தையொன்று தக்குப்புக்கென்று விளையாடிக்கொண்டிருந்தது. கையில் போட்டிருந்த காப்புகளையும், கழுத்தில் போட்டிருந்த சங்கிலியையும் கழற்றிமணலில் புதைப்பதும் எடுப்பதுமாக இருந்தது. இராசுவுக்கு இது ஒருபெரிய சோதனையாகி விட்டது. அங்கு மிங்குமாகப்பார்த்து முழிசினான். ஒருதம்பியும் கண்ணில் படவில்லை. என்பிடியையும் உதறிக் கொண்டு காப்பையும் சங்கிலியையும் எடுத்துக்கையில்பொத்திக்கொண்டான். என் துடைகள் இரண்டும் சன்னிக்காரர் போல் உதறத் தொடங்கிவிட்டன. உடம்பெல்லாம் குலுங்கத் தொடங்கி விட்டது. வெயர்வை கடல்போல் பெருக்கெடுத்தது. இத்தனைக்குள்ளும் தெய்வம்தான் கொண்டுவந்து தள்ளி விட்டதுபோல் ஒருயோசனையும் துள்ளிக்குதித்தது. "உபாத்தியாயர் ஐயா, இங்கே இருக்கிறாரோ?" என்றேன்.

"அவர் இப்போதுதான் வெளியில் போயிருக்கிறார். சற்றுநேரத்திற்குளெல்லாம் வந்துவிடுவார். என்ன செல்லத்துரை! அந்தப்புலத்துக்குத்தகைக் காசு இன்னுந்தானே வாங்கித் தருகிறாய். செலவுக்கும் ஒரு செம்புக் காசில்லை. அதை ஒருக்கால் வாங்கித் தந்துபோடு" என்று சொல்லிக்கொண்டே சமையலறையிலிருந்து தலையை நீட்டினாள் உபாத்தியாயரம்மா.

"அதுதான் அம்மா கூப்பிட்டேன். வெள்ளெனத் தோட்டத்திற்குப் போகும்போது அவனைச் சந்தித்தேன். நாளைக்குக்கட்டாயம் தருவான். மனசார அவன் மெத்தக்கஷ்டப்படுகிறான். இவ்வளவு காலமும் அவன் நாணயமாக நடக்கவில்லையா? நாளைக்குத் தோட்டத்தால் வரும்போது கட்டாயம்வாங்கிக் கொண்டுவருகிறேன். அதிருக்க அம்மா, இங்கே பாருங்கள். குழந்தையைக் கூப்பிடுங்கள். காப்பும் சங்கிலியும் எங்கேயிருக்கிறது. ஒரு நாளும் இப்படிக் குழந்தைகளுக்கு போட்டுவிடக்கூடாது. நல்லவேளை. இது வேறேபாருடையவும் கையில் அகப்பட்டிருந்தால், நல்லவேடிக்கையாகவே இருந்திருக்கும். ஆரும்கண்டால்தானம்மா பகிடி. காணாவிட்டால் அசல்திருட்டு. கடவுள்செய்த புதுமை. இராசுவின் கண்ணிலேபட்டது."

இதைக்கேட்டுக்கொண்டிருந்த இராசுவுக்கு ஆத்திரம் மெத்தவேகமாக ஏறிக்கொண்டிருந்தது. மூச்சுக்கொட்டாவிதானும் விடாமல் காப்பையும் சங்கிலியையும் உபாத்தியாயரம்மா கையில் கொடுத்தான். உபாத்தியாயர் வீடுகடந்தது. ஒரு கணக்குவழக்கு இல்லாமல் பேச்சுவிழுந்து கொண்டேயிருந்தது. வீட்டிற்குப்போயும் அரைமணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது. பேச்சுக்குறையவில்லை. "கடைசியாக எனக்குவந்த அதிர்ஷ்டத்தை—வலிய வந்த சீதேவியைத் தொலைத்தாயே! சனியன்மாதிரி முன்னுக்குவந்தாயே! உபாத்தியாயர் அம்மாவுக்கு வெள்ளை போடத்தான் நீ இந்தவேலைசெய்தாய்" என்று பெரியகர்ச்சனையோடு பேசி மூச்சுவிட்டான்.

என்ன மச்சான் இவ்வளவு கோபம். விஷயம்தெரியாமல் கதையை முடித்து விட்டாய். பெரிய ஒரு அதிர்ஷ்டம் உன்னோடு கூடத்தானிருக்கிறது. அது உன்னைவிட்டுநீங்கியிருந்தால் இன்றைக்கு உன்கதி அதோகதிதான். உபாத்தியாயரைப்பற்றி உனக்குத் தெரியாது. இலேசுப்பட்டவரல்ல. ஒரு வாழைக்குலை வெட்டிய எங்களுடைய முருகேசுவை ஒருமாதம் மறியலில் இருத்தி எழுப்பினவர். நீ எடுத்துப் போட்டு தப்பலாமென்று நினைக்காதே. அந்தஆள் எண்ணிஇரண்டு நாளில் பிடித்தேபோடும். கடைசியாகநீ மாத்திரமல்ல—நானும் கோடுமட்டாக அலையத்தான் வேண்டும். நீ கள்வன் என்று பெயரெடுப்பதோடு மாத்திரம் நில்லாமல்—என்னையும் ஒருவேளை சிறைக்கு அனுப்பியே விடுவாய். உன் மனைவிமக்கள் மாத்திரமல்ல—என் மனைவிமக்களும் வறுமையால் வருந்தவே நேரிடும். இத்தனை ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றிய என்னை ஒரு அதிர்ஷ்டமென்பதா? சனியன் என்பதா? இன்னும் சந்தேகமா? சொல்லுகிறேன்கேள். மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறதல்லவா? ஒருவனுக்கு நட்டஞ் செய்யலாமா? அல்லாமலும் நீ ஒரு வேதக்காரனல்லவா? தேவகட்டளை என்ன சொல்லுகிறது. களவெடுத்த பொருளை உடையவருக்குக் கொடுக்காவிட்டால்—பிறருக்கு வருவித்த நஷ்டத்தைப் பரிகரிக்காவிட்டால் இரட்சணியமடைய மாட்டானென்பது உனக்குத் தெரியாதா? உன்னை உலகஆபத்துக்களிலிருந்து மாத்திரமல்ல தேவகோபத்திலிருந்தும் உன்னைக் காப்பாற்றிய உன் அதிர்ஷ்டம் நானல்லவா? உன் சீவியமுழுதும் நன்றிசெலுத்த வேண்டிய அதிர்ஷ்டம் நானல்லவா? என்ன இராசு? ஒன்றும் பேசாமல் உம்மாண்டி மாதிரியாயிருக்கிறாயே! இன்னுமா கோபந்தணியவில்லை?"

"பேசுவதா! பேசத்தான் என்ன இருக்கிறது. கோபமா! பாவத்திலிருந்து காப்பாற்றிய உம்மையா கோபிப்பது. என் அதிர்ஷ்டமே! அதிர்ஷ்டம். பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளவேண்டும். இனிமேல் உம்முடைய பெயரைச்சொல்லி தான்கூப்பிடுவதேயில்லை. என் அதிர்ஷ்டமென்றே கூப்பிடத்தீர்மானித்துவிட்டேன்."

"ஆனந்தம்"

## யேசுவின் திருநாம மான்மியப்பத்து

(வடக்கன்குளம் — M. சூசைப்பிள்ளை)

### வெண்பா

கோதில்லை மேற்புறணி கோள்களணுவு மேயில்லை
தீதில்லை சற்றுந் தெவிட்டில்லை—மேதினியில்
உன்னமனம் மிக்கினிக்கும் ஓதவாய் தித்திக்கும்
கன்னிமரி யீன்ற கரும்பு.

### விருத்தம்

1. கண் கொள் மணியோ பேரணியோ கரும்போ கரும்பினின் சுவையோ
விண் கொள்ளமுதோ கோற்றேனோ மேவுமினிய முக்கனியோ
மண் கொள்பவத்தை யொழிக்கவந்த மருந்தோ சத்யமாமறையில்
திண் கொள் முனிவர் கண்டேத்தும் யேசு என்னுந் திருப்பெயரே.

2. கற்றோர்க்குயர்ந்த மதியளிக்குங் கல்லாதவரைக்கற்பிக்கும்
அற்றோர்தம்மை யாதரிக்கும் அவரை யரசராக்குவிக்கும்
மற்றோர் மதங்கள் தமைக்கடியும் வானிலேற வழிகாட்டும்
செற்றோர் தமையுங் காத்தளிக்கும் யேசு வென்னுந் திருப்பெயரே.

3. பாடற்கினிய வாக்களிக்கும் பரமா[illegible]னந்த பதஞ்சேர்க்கும்
கூடற்கினிய திருவடியார் கூடு[illegible]குழாத்திற் கூட்டுவிக்கும்
நாடற்கினிய திருவாழ்வை [illegible]குபயக்கும் நலமளிக்கும்
தேடற்கினிய சீரளிக்கும் [illegible]யசுவென்னுந் திருப்பெயரே.

4. வெய்யவினையின் வேரா[illegible]க்கும் மேலாம் பதவியினிற் சேர்க்கும்
துய்யவேத மறைப்பொருளைத் துலக்கிக்காட்டும் பொதுமடவார்
மையற்கடலாழாமல் மனமயக்கை யறுக்குமுயர் மரியின்
செய்யமலர்ச் சேவடிசேர்க்கும் யேசுவென்னுந் திருப்பெயரே.

5. எண்ணற்கரிய பரமரகசியத்தை இஃதென் றறிவிக்கும்
மண்ணேபுரியும் வஞ்சகத்தை மாற்றிக்கதியிலேற்றுவிக்கும்
உண்ணமுடியா வானமுதை உம்பரோடுண் டிடப்புரியும்
திண்ணமளிக்குந் திறமளிக்கும் யேசுவென்னுந் திருப்பெயரே.

6. வஞ்ச அலகை செயுங்கொடிய மாயமயலை மாற்றுவிக்கும்
கஞ்ச மலர்ச் சேவடியுடைய கன்னித்துணைவன் கழல்சேர்க்கும்
மஞ்சு மஞ்சுங் கருங்குழலார் வலையிலகப்படாதேயருளும்
செஞ்சொற்புலவர் கவிக்கு மெட்டா யேசுவென்னுந் திருப்பெயரே.

7. போராபத்துக் குள்ளான பேரையினி தாண்டருள்புரியும்
ஓராதருங் கானடந்தோரை யுற்றவிலங்கை யோட்டுவிக்கும்
நீரால் அனலால் உறும்விபத்தைநீக்கி வாழ்வை நிலைப்பிக்கும்
தீராநோயைத் தீர்த்தருளும் யேசுவென்னுந் திருப்பெயரே.

8. பொங்கு கடலினிடை யாழ்ந்தே புலம்புவோரைக் கரைசேர்க்கும்
பங்குலுறு பேரிடிவீழ வரும்போததனை மறித்தகற்றும்
வங்கமுடை யத்திகைப்போர்கள் மனச்சஞ்சலத்தை மாற்றுவிக்கும்
திங்களணி கன்னிகை போற்றும் யேசுவென்னுந் திருப்பெயரே.

9. ஈனவஞ்சக் கூளிவலி இகலைச்செகுத்து வெற்றிதரும்
ஞானவழியில் இந்தியங்கள் நன்குபயில நலமருளும்
வானநாட்டின் பேரின்ப வாழ்வையடைய வழிகாட்டும்
தேனேயென்னத் தித்திக்கும் யேசுவென்னுந் திருப்பெயரே.

10. வயலிற் குடச்சங்கின மீன்றமணியை அன்னக்குடம்பையென்றே
கயலிற் புரளுமலர்க்கண்ணார் கையாற்றுவுந் தரையிற்பேய்
மயலை யொழித்ததெது மனுவை வானிற் சேர்த்ததெது வெம்புன்
செயலைப் பொறுத்தா தரித்ததெது யேசுவென்னுந் திருப்பெயரே.

## 8 மாசச் சிறைத்தண்டனை

மாத்தறையைச் சேர்ந்த கிரிண்டா மத்திய ஐக்கிய சங்கத் தனாதிகாரியாகக் கடமைபார்த்த எச். பி. டொன் யூவானிஸ் என்பவன் மேற்படி சங்கத்திற்குரிய பணத்தில் 673 ரூபாவை அபகரித்தானென்னுங் குற்றச்சாட்டில், மாத்தறைப் பெரிய நீதிஸ்தலத்தில் சமீபத்தில் விசாரணை செய்தபோது குற்றவாளியெனக்கண்டு 8 மாதக் கடுஞ் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றான்.

## ஓர் கோலவிவாகம்

மட்டக்களப்பு தபாற்கந்தோரில் தலைமைப் போஸ்ற்மாஸ்றராகக் கடமை பார்த்துவரும் திரு. S. J. W. அழகையா அவர்களின் இரண்டாவது புதல்வரும், பெரிய மாதகலிலே யாழ்ப்பாண வைபவமாலையின் ஆக்கியோனாய் விளங்கிய மயில்வாகனப் புலவரின் வம்ச வழித்தோன்றலாகிய ஆறுமுக உடையாரின் பேரனும், வவுனியாக் கச்சேரியில் உபஅதிபராய்க் கடமை ஆற்றி வரும் திரு. A. T. மூர்த்திஅவர்களின் மருகரும், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையில் உபஎஞ்ஜினியராய் விளங்குபவருமான திரு. T. A. அழகையா அவர்களுக்கும், பெரியமாதகலில் பரம்பரைச் சைவவேளாளமரபில் உதித்துச் சத்தியதிருமறையிற் புகுந்து சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியருள் ஒருவராய், அக்கல்லூரி விடுதிச்சாலையில் கடந்த 28 வருடங்களாக உப அதிபராய்க் கடமையாற்றிவருகின்ற திரு. சிதம்பரப்பிள்ளை பிரான்சீஸ் அவர்களின் சிரேஷ்டபுத்திரியும், தற்போது பம்பலப்பிட்டியில் நவசந்நியாசியாயிருக்கும் விற. F. J. நவரட்ணம்அவர்களின் சகோதரியுமாகிய சௌபாக்கியவதி மேரி திரேசா பாக்கியம் என்பவளுக்கும் சென்றமதி 23-ந்திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவிலில் வண. P. T. ஜேம்ஸ் சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேற்றப்பட்டது. தம்பதிகள் கோவிலைவிட்டு நீங்கியதும் திரு. J. இராசரத்தினம் அவர்களாலும்அவர் பாரியாராலும் மணமகனுக்கும் மணமகளுக்கும மலர்மாலைகள் சூட்டப்பட்டு பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. பின் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் இவர்ந்து ஆசிரியர்கள் இனபந்துக்கள் புடைசூழ மணமகளில்லம் சென்றனர். அங்கு மணமகள் பெற்றோர் தம்பதிகளுக்குமாலைகள்சூட்டி ஆசிகூறினர். அதன்பின் சமூகமளித்த யாவர்க்கும் வரவேற்புக்கொண்டாட்டம் மிகவிமரிசையாக நடந்தேறியது. அத்தருணத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியருள் ஒருவரான திரு. C. W. D. அல்வீனஸ் அவர்களாலும், கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரி ஆசிரியருள் ஒருவரான திரு. S. A. சாள்ஸ் அவர்களாலும் தம்பதிகளின் குணாதிசயங்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மணமகன் எழுந்து தங்களுக்குச் செய்யப்பட்ட மரியாதைக்குப்பதில்நன்றி கூறினர். ஈற்றில் இனசன பந்துக்கள் சிநேகிதர் தம்பதிகளை வாழ்த்தித் தத்தமில்லம் சென்றனர். இப்புதிய குடும்பம் அமலனருளால் அட்டஐசுவரியங்களை மாரிமழைபோல் நிறையப் பெற்றுப் பல்லாண்டு நீடூழி வாழ்வதாக!

## வரப்பெற்றோம்

தூத்துக்குடியிலிருந்து வெளிவரும் சுதந்தரத்தூது என்ற பத்திரிகை இதழ் வரப்பெற்றோம். இந்தியகாங்கிரஸ் மகாசபையின் பெயரினால் சிலஆரசியல் வாதிகள் காட்டிவரும் விபரீதப்போக்கைக் கண்டித்து, தொழிலாளர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே உண்மையான சமூகதர்மத்தை விர்த்தியாக்குவதற்காக உழைப்பதே இப்பத்திரிகையின் நோக்கமாகும். தொழிலாளர்களுக்கு இப்பத்திரிகை மிகவும் துணையாயிருக்கக் கூடியது.

இது தூத்துக்குடியிலுள்ள இந்திய சுதந்தர சங்கத்தின் ஆதரவில்மாதமிருமுறை வெளிவருகின்றது. முத்திரைகள் அனுப்பிப் பிரதிகளை இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகிறோம்.

விலாசம்: 40A விக்ரோறியா வீதி, தூத்துக்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அர்ச் அந்தோனியார் திருநாள் பாஷையூர்

1949-ம்ஆண்டு ஆனிமாசம்1-ந்தேதி புதன்கிழமை பாஷையூர் அர்ச். அந்தோனியார்கோவில் திருவிழாக்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 13-ந்திகதி திங்கட்கிழமை முடிவாகும்.

நிகழ்ச்சிநிரல்

1-ந் தேதி தொடக்கம் 11-ந் தேதி வரை மாலை 7 மணிக்கு ஆராதனையும் ஆசீர்வாதமும்.

12-ந் தேதி திவ்வியசற்பிரசாதத் திருநாள்.
காலை 7 மணிக்குப் பாடற்பூசை
மாலை 4 மணிக்கு ஆராதனையும் அதன்பின் தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரமும், ஆசீர்வாதமும்.

13-ந் தேதி அர்ச். அந்தோனியார்திருநாள்.
காலை 7 மணிக்குப் பாடற்பூசை.
காலை 9 மணிக்கு அர்ச். அந்தோனியார் சுரூப சுற்றுப்பிரகாரமும் ஆசீர்வாதமும்.

கட்டளைக்குரு


## சத்தியவேத பாதுகாவலன்

1949-ம் ஆண்டு ஆனி மாசம் 2-ந் திகதி


### எமிலியான் சுவாமியார் "என் ஆண்டவர்" ஆனார்.

சென்ற மாசம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அதி உன்னத திருச்சடங்குகளோடு மேற்றிராசன பதவிக்குஅபிஷேகம்செய்து உயர்த்தப்பட்ட அதிவணக்கத்துக்குரிய (தற்பொழுது மகாமேன்மைதங்கிய) ஜே. எமிலியானுஸ் பிள்ளை மேற்றிராணியார் அவர்களுக்கேஇவ் இதழைஅர்ப்பணம் செய்கின்றோம்.

புதிய மேற்றிராணி ஆண்டவர் அவர்கட்கும் அவரை அப்பதவிக்கு உயர்த்திய ஏனையோருக்கும் நாம் காட்டக்கூடிய நன்றி விசுவாசத்திற்கு இச்சமர்ப்பணம் மிகச்சிறிய தொன்றாகும். சரித்திரப்பெருமை வாய்ந்த இவ்வைபவத்தில் புதிய மேற்றிராணியாரைஒரு துணைக்கருவியாகக் கணிப்பது நமது நோக்கமன்று. அவருடைய உன்னத உற்பத்தி, அரும்பெரும் குணதிசயங்கள் முதலியவற்றைப் புகழ்ந்துபாடிய பாக்களைச் சென்ற இரண்டு வாரங்களிலும் பிரசுரிக்கப்பட்ட அபிஷேக ஞாபக இதழ்களில் நம் வாசகநேயர்கள் படித்து இன்புற்றிருப்பார்கள் எனநம்புகின்றோம். நம்புதிய மேற்றிராணியார், அவருக்கு முன்னேடிகளான மிகப்பலர் விதைத்த விதைகளின் விளைவைத் தம்அபிஷேக தினத்தன்று அறுவடைசெய்யும் பாக்கியம்பெற்றார். அச்சுபதினத்தைக் காணும்பாக்கியம் அவருடைய முன்னேடிகளுக்குஇல்லாமல்நமக்குக் கிடைத்தது ஒரு பெரும் சிலாக்கியமாகும்.

அவருடைய அருங்குணங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் அபிஷேக இதழ்களுக்கு விஷயதானம் புரிந்த பலர் தனித்தனி கையாண்டிருக்கின்றனர். இப்பொழுது நாம் எழுதும் விஷயத்தைப்பற்றிப் பலர் எழுதியிருந்த போதிலும்அவ்விஷயம் நம்மேற்றிராசனத்தின் பிற்காலவளர்ச்சிக்கு எவ்வளவுஉவப்பானதென்பதையே நாம் இங்குவற்புறுத்துகின்றோம்.

இவ்வளவு காலமும் நாம் மிகவும் உருக்கமான அன்போடு "எமிலியானஸ் சுவாமியார்" என்று அழைத்து வந்தவரும் இன்று அபிஷேகம் பெற்றுத் திருச்சபையின் இராசரிஷிகளுள் ஒருவராய் விளங்குபவருமான மகாமேன்மைதங்கிய எமிலியானஸ்பிள்ளை மேற்றிராணியார் நம் மேற்றிராசனத்தின் வருங்கால உயர்ச்சிக்கு உகந்த அறிகுறிகள் பலவற்றைத் தம்முள் கொண்டுள்ளார்.

விசுவாசத்தில்ஆணித்தரமாக நிலைபெற்றுள்ளஊரிலும், சத்தியவேதத்தில் ஊறித்திளைத்தகுடும்பத்திலும் நமது புதிய மேற்றிராணியார் தோன்றினதும் அல்லாமல் அவருடைய முழுப்படிப்பும் வளர்ச்சியும் வருங்கால நன்மைகளைக் குறிப்பனவாகவே இருந்து வந்தன. புதியமேற்றிராணி ஆண்டவரைப்போன்ற இளைஞர்களைக்குருத்துவஅழைத்தலுக்கு ஆயத்தப்படுத்தி ஊக்கப்படுத்திவிடும் நமது பிரசித்த கத்தோலிக்கக் கல்லூரிகள் எவ்வகையிலும் இளைத்தன என்று கூறமுடியாது. வைகாசி 22-ந் திகதி நடந்தேறிய வைபவம் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபையானது யாழ்ப்பாணமக்களுக்கிடையேமுதிர்ச்சி அடைந்து வலுக்கொண்டுவிட்டது என்பதைக் குறிக்கின்றது. நமது கல்லூரிகளில் மேல்வகுப்புக்களிலிருந்து தேவதொண்டுக்குத்தம்மைத் தியாகம்செய்வோர் தொகை நாளுக்குநாள் அதிகரிக்காவிடின் யாழ்ப்பாணத் திருச்சபையின் முதிர்ச்சி சொல்அளவிலே நின்றுவிடும். அப்படியில்லாமல் நம் மேற்றிராணியார் உயர்தரக்கல்விக்காகஇலங்கைச் சர்வகலாசாலைக்குச் சென்றுமிருந்த கியாதியோடும் ஒருவிதத்திலும் அப்பழுக்கு இல்லாமலும் மீண்டனர். சர்வகலாசாலைப்பட்டம் பெற்றபின் குருத்துவக்கல்வியை நாடியதே மேற்றிராணி ஆண்டவருடைய பிற்காலவாழ்வு எத்தன்மையுடையதாய் இருக்கும் என்பதை எடுத்துக்காட்டும் மங்காத்தீபமாய் மிளிர்கின்றது.

சாதாரணமாணவனுய்ச் சர்வகலாசாலைக்குச்சென்று கண்ணியமானபட்டம் பெற்றபின் குருத்துவபடிப்பைநாடிய முதற்குரவர் நாமறிந்த வரையில் நம் துணை மேற்றிராணி ஆண்டவரேயாகும். அவருக்குப்பின் அவரது தம்பியாராகும் அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியாரும் இன்னும் பல பட்டதாரிகளும் நம் மேற்றிராணி ஆண்டவர் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி வருகின்றனர்.

இத்தருணத்தில் நமது மனதில் பல எண்ணங்கள் தேங்கி வழிகின்றன. சர்வகலாசாலைகளை முதன் முதலில் முளைக்க வைத்தது சத்தியகத்தோலிக்க திருச்சபையேயாகும். திருச்சபையைக் கண்டனம் செய்வோர் சொல்வதுபோலத் திருச்சபையானது உயர்தரக்கல்விக்கு ஒரு போதும்முரணாய் இருந்ததில்லை. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் கத்தோலிக்க மாணவர் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் முதலிய சர்வகலாசாலைகளில்படிக்க இடம் பெற்றபொழுதுபுறசமயப் பேராசிரியரிடத்திலும் அவர்கள் கல்வி கற்க இசைந்ததே கத்தோலிக்கத் திருச்சபைக்கல்வியின்பால் கொண்டுள்ள கண்ணியத்தை விளக்குகின்றது.

இலங்கையிலுள்ள நான்குஅமலோற்பவிநாயகிசபைமேற்றிராணிமாரும் சர்வகலாசாலைப்பட்டதாரிகளென்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்க அதிகாரிகள் உயர்தர அரசாங்க சேவைக்குச் சர்வகலாசாலைப் பட்டதாரிகளையே தேர்ந்தெடுப்பதுபோல ரோமாபுரியும் திருச்சபைச் சேவைக்கும்திறம்படக்கற்றோரையேநாடுகின்றது. தற்காலம் திருச்சபையை ஆண்டுநடத்துவோர் சர்வகலாசாலைப் படிப்போடு நின்றுவிடாதுவேதகல்வியிலும் பாண்டித்தியம் பெற்றோராவர்.

அவ்வளவு பாண்டித்தியமும் குணசீலமுங்கொண்ட குரவரையே ரோமாபுரி நம்துணைமேற்றிராணியாராக அங்கீகாரம் செய்திருக்கின்றது. நமது மேற்றிராணியார் கலாசாலை ஆசிரியராக நீண்டகாலம் சேவைசெய்யாவிடினும் தமது தலைமேய்ப்பராகிய மகாமேன்மைதங்கிய கியோமார் ஆண்டவர் அவர்களின் அடிகளைப்பின்பற்றிக்குருமாரும்பிறரும் உயர்தரக்கல்வி கற்பதில் ஊக்கம் செலுத்துவாரென்று நாம் திடமாக நம்புகின்றோம். இத்துறையில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளோம். இன்னும் முன்னேறப்போதிய இடமுண்டு.

ஆகவே நமது சந்ததியாருக்கு நாம் எல்லோரும்நெடுங்காலமாக ஆசித்துக்கனவுகண்டு கொண்டுவந்தகத்தோலிக்கசர்வகலாசாலையொன்றை நம்துணை ஆயர் தமது ஆட்சிக்காலத்துக்குள் நமக்குத் தந்து உதவுவாரென்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

### திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள்

சுவிசேஷ வாசிப்பு
(அரு. 14: 23—31)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடையசீஷர்களுக்குச்சொன்னதாவது: ஒருவன் என்னைச் சிநேகித்தால், என் வாக்கியத்தை அநுசரிப்பான்; என்பிதாவும் அவனைச் சிநேகிப்பார்; அன்றியும் அவனிடத்தில் வருவோம், அவனுக்குள் வாசஞ்செய்வோம். என்னைச் சிநேகியாதவன் என் வாக்கியங்களை அனுசரியான். மேலும் நீங்கள் கேட்ட வாக்கியம் என்னுடையதல்ல; என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கின்றது. நான் உங்களோடு வாசம்செய்கையில் இவைகளை உங்களுக்குச்சொன்னேன் ஆனல் பிதா என்நாமத்தினல் அனுப்பும் தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் தாமே உங்களுக்குச் சகலத்தையும் படிப்பிப்பார்; நான் உங்களுக்குச்சொன்ன யாவற்றையும் அவர் உங்களுக்கு ஞாபகப்படுத்துவார். சமாதானத்தை உங்களுக்குவிட்டுப்போகிறேன். நான் என் சமாதானத்தைஉங்களுக்குக் கொடுக்கிறேன். ஆனல், நான் உங்களுக்குக் கொடுப்பதோ உலகங் கொடுப்பதுபோலல்ல. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கக்கடவது. நான்போய் உங்களிடத்தில் மறுபடியும் வருகிறேனென்று உங்களுக்கு நான் சொன்னதைக் கேட்டீர்களே; நீங்கள் என்னைச் சிநேகிப்பீர்களேயாகில், பிதாவினிடத்திற் போகிறேன் என்றதினல் மெய்யாகவே சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில் பிதா என்னிலும் அதிகம் பெரியவராயிருக்கிறார். மேலும் இதுசம்பவிக்கும்போது நீங்கள் விசுவசிக்கும்படி இது சம்பவிக்கிறதற்கு முன்பே இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களோடு அநேககாரியங்களைப் பேசேன்; ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதி வருகிறான் அவனுக்கு என் பேரில் எவ்வளவேனும் அதிகாரமில்லை. ஆயினும் நான் பிதாவைச் சிநேகிக்கிறேன் என்று உலகம் அறியும்பொருட்டு பிதா எனக்கு எப்படிக் கட்டளையிட்டாரோ அப்படியேசெய்கிறேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### புதிய மேற்றிராணியார்

எங்கள் புதிய மேற்றிராணி ஆண்டவர்அவர்கள் வருகிற 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை யாழ்ப்பாணம்அடைக்கலமாதாகோவிலில் முதல்முறையாக உறுதிப்பூசுதல் திருச்சடங்கை நிறைவேற்றிவைப்பார். அன்று காலை 6-30 மணியளவில் புதிய ஆயர் வரவேற்கப்படுவார். 6-45 மணிக்கு புதியமேற்றிராணிஆண்டவர்அவர்களால் திவ்விய பூசை சொல்லப்படும். பின்பு ஆண்டவர்அவர்கள் அக்கோவிலுக்குச் சேர்ந்த நூற்றுக்குமேற்பட்ட தொகையினருக்கு உறுதிப்பூசுதல்எனும் தேவதிரவிய அநுமானத்தை அளித்தருளுவார். பின் அக்கோவிலைச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் புதியஆண்டவர் அவர்களுக்குக் குதூகலமான ஓர் வரவேற்பு அளித்துத் தங்கள்மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுவார்கள்.

### சிங்களச் சின்னம்

"வல்லமையுள்ள மனிதர் பெறமுடியாதது என்ன?" என்னும் சொற்கள் பொறிக்கப்பட்ட சிங்களச் சின்னத்தை தூரகிழக்கு விமானப்படைத் தளபதி, இலங்கை விமானப்படைத் தலைமைக் காரியாலயத்துக்குப் பரிசாகவழங்கியுள்ளார். கட்டுநாயகாவிமான நிலையத்தில் ஆர். ஏ. எவ். அணிவகுப்புநடந்தபோது, தூரகிழக்கு விமானப்படைத்தளபதி சேர் ஹியூ லாயிட் அவர்களால் இச்சின்னம் பரிசளிக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்துசிங்கப்பூருக்கு போகும் மார்க்கத்தில் இங்கு வந்திறங்கியுள்ள தளபதி சேர் ஹியூலாயிட், ஷாங்காய்க்குச் சென்று அங்குள்ளவிமான நிலையங்களையும், விமானப்படைகளையும் பார்வையிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. விமான நிலையத்தில் நடந்த கௌரவ அணிவகுப்பின்போது இலங்கைவிமானப்படையினரால் கௌரவமளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொழும்பு, கொச்சிக்கடை
## அர்ச். அந்தோனியார்
# மகோற்சவம்

பிரஸ்தாப திருநாளை முன்னிட்டுத் தூரவிடங்களிலிருந்து இங்கு திருயாத்திரையாய் வரும் திருயாத்திரிகர்களுக்கு கொழும்பு, கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் கத்தோலிக்க சங்கத்தின் வாயிலாய், கொட்டாஞ்சேனை ஆசனக்கோவிலின் வண. G. ஷோவியர் O. M. I. கட்டளைச் சுவாமியாரவர்களின் அனுமதியுடன் ஆனி 12-ம் 13-ந் திகதிகளில் இருக்க இடமும் இலவசச் சாப்பாடும் கொடுக்க ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆதலின் தூரவிடங்களிலிருந்து வரும் திருயாத்திரிகர்கள் கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் யாத்திரிகர்கள் ஸ்தானத்திற்கு வந்து சேருமாறு இத்தால் அழைக்கின்றோம். எமது இக்காரியத்தை முன்னிட்டுப் பிறவிடங்களில் எமது சங்கத்தின் சார்பாக யாராகிலும் நன்கொடைகளோ அல்லது உதவிகளோ கேட்டு வருபவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யவேண்டாம் என்று பொதுசனங்களை இத்தால் கேட்டுக்கொள்கிறோம். எமது சங்கம் இத்தகைய காசு அறவாக்கும் முறையை எதிர்க்கிறது. இவைகளைப்பற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

காரியாலயம் :
39, ஜெம்பட்டாத் தெரு,
கொழும்பு,
21—5—49.

இங்ஙனம்
M. S. பேர்ணந்து,
கௌரவ காரியதரிசி.

### கடன்தொல்லை

கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கையில் வசித்துவந்த திரு. சோமசுந்தரம் என்பவர் கடன்தொல்லைகளினால் சகிக்கமுடியாத மனக் கசப்படைந்து சென்ற வெள்ளிக்கிழமை இரவு கொழும்புப் பேரையாற்றில் குதித்துத் தற்கொலைசெய்து கொண்டதாகத் தெரிகிறது. காலஞ்சென்றவரான திரு. சோமசுந்தரத்துக்கு 7 குழந்தைகளும் மனைவியுமிருப்பதாகத் தெரிகிறது. இவர் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் பணியாளனாகவேலைபார்த்துவந்தாராம்.

### வண்டிகுடைசாய்ந்து ஒருவர் மரணம்

கிருதியடைத்தோ அல்லது சிறுமதில்கள் கட்டியோ பண்ணைத் தாம்போதியைப் பாதுகாக்காவிட்டால் அதி பிரயாணிகளுக்கு அபாயகரமாகவே இருக்கும் என்று யாழ்ப்பாண நகர மரணவிசாரணை அதிகாரி குறிப்பிட்டார். புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்தவரும் நல்லநிலைமையிலுள்ளவருமான ஒரு விவசாயியின் பெயர் ஐயம்பிள்ளை கதிர்காமு. காலஞ்சென்றவரின் மைத்துனராகிய ஆறுமுகம் விசுவலிங்கம் மரணவிசாரணையின்போது சாட்சியமளிக்கையில் கூறியதாவது: காலஞ்சென்றவரும் நானும் இரண்டு வண்டிகளில் புங்குடுதீவிலிருந்து 46 மூடை புகையிலையை ஏற்றி வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் றெயில்வே குட்ஷெட்டுக்கு கொண்டுவந்தோம். புகையிலையை இறக்கிவிட்டு இருவரும்பெரிய கடைக்குப்போய் 20 பக்கெற் சீமெந்து, தேங்காய் முதலியசாமான்களை காலஞ்சென்றவரின் வண்டியிலும் ஸீலிங்பலகை பனைமரங்கள் முதலிவற்றை எனது வண்டியிலும் ஏற்றிக்கொண்டு மறுநாட்காலை 6 மணிக்குப் புறப்பட்டுப் பண்ணைத் தாம்போதியால்புங்குடுதீவை நோக்கிப்போய்க் கொண்டிருந்தோம். முதல் மதகைத்தாண்டும்போது புயல் காற்றுவீசிற்று. காலஞ்சென்றவரின் வண்டிக்கு முன்னே எனது வண்டி சென்றது. ஒரு முஸ்லீம் என்னைப் பார்த்து மற்றவண்டி கடலுக்குள் குடைசாய்ந்துவிட்டதென்று கூறினார். உடனே எனது வண்டியை நிறுத்திவிட்டுத்திரும்பிப் பார்த்தபோது காலஞ்சென்றவரின்வண்டிகடலுக்குள்வீழ்ந்து போய்க் கிடந்தது. காலஞ்சென்றவர் அவ்வண்டிச்சில் ஒன்றின்கீழ் கிடந்தார். ஒருமாடு தாம்போதியில்நின்றது. மற்றமாடு தண்ணீருக்குள் நின்றது. சிலரின் உதவியுடன் காலஞ்சென்றவரின் பிரேதத்தைத் தண்ணீரிலிருந்து வெளியே தாப்போதிக்குக்கொண்டுவந்தேன்" இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து, சுமார் 50 அடிக்கு அப்பாலுள்ள மதகு வெடித்துப்போயிருக்கிறதென்றும் அதை உடனடியாகப் பழுதுபார்க்கவேண்டுமென்றும் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். எக்ஸ். அண்ணுசாமிப்பிள்ளை கூறினர். நீரில் மூழ்கியதாலும் தலையில் காயம் ஏற்பட்டதாலும் மரணம் சம்பவித்ததென்றும் இவ்விபத்துத் தவிர்க்கமுடியாததென்றும் அவர் தீர்ப்பளித்தார்.

### சுதேச பாஷையில் "மணியோடர்"

சென்றவாரம் ஒரு புதுஅவசியமான உத்தரவு தபாற்பகுதியால் வெளியிடப்பட்டது. என்னவெனில் சிங்கள—தமிழ் பாஷைகளில் நிரப்பப்பட்ட "மணிஓடர்"ப் பாரங்களைத் தபாற் கந்தோர்களில் ஏற்கவேண்டுமெனவும், அவசியமெனில் தபாற்கந்தோர் வேலையாட்களே அப்பாரத்தை நிரப்பிக்கொடுக்க வேண்டுமெனவும் அவ்வுத்தரவில் கூறப்பட்டுள்ளது.

### இலங்கா ஆயுர்வேத கல்லூரி 1949-ம் ஆண்டின் பரீட்சைமுடிவு

1949-ம் ஆண்டு பங்குனிமாதம்நடந்தேறிய வருடாந்தப் பரீட்சையில் கீழ்க்காணும் மாணவர்கள் தாரதர ஒழுங்கின்படி சித்தியடைந்துள்ளாரென இலங்கைச் சுதேச வைத்திய சபையார் வெளியிட்டிருக்கிறார்கள்.

விசேஷ வகுப்பு (எல். ஏ. எம். பி.)
பி. நாகராஜசர்மா 1-ம்பிரிவு

4-ம் வருடம் (டி. ஏ. எம்.)
எஸ். இராசையா 2-ம்பிரிவு

3-ம் வருடம்
1. கே. பாராஜசிங்கம் 2-ம்பிரிவு
2. பி. பிலிப்ஸ் ,,
3. ஏ நல்லையா 3-ம் பிரிவு
4. வி. கதிரவேலு ,,
5. வி. செல்லையா ,,
6. எஸ். இராசையா ,,

2-ம் வருடம்
1. என். இரத்தினசபாபதி 2-ம் பிரிவு
2. ஜி. ஜோர்ஜ் 3-ம் பிரிவு
3. எஸ். வேலும் மயிலும் ,,
4. வி. செல்லையா ,,
5. வி. சிவப்பிரகாசம் ,,
6. வி. கதிரவேலு ,,
7. எஸ். குணரத்தினம் ,,

1-ம் வருடம்
1. வி. சின்னப்பு 3-ம் பிரிவு
2. வி. பொன்னம்பலம் ,,
3. கே. கணபதிப்பிள்ளை ,,
4. டி. தம்பியையா ,,
5. எஸ். குணரத்தினம் ,,
6. எஸ். கந்தசாமி ,,

# மருதமடுப் பதியில் யூபிலித் திருவிழா

## 1949-ம் ஆண்டு ஆனி மீ 23-ந் உ தொடக்கம் ஆடி மாசம் 2-ந் திகதிவரையும்

ஆனிமாசம் 23-ந் திகதி சாயந்தரம் 5 மணிக்கு திருச்செபமாலை நாயகியின் துவசாரோகணம்.
இரவு 7-00 மணிக்கு ஒவ்வொருநாளும் செபமாலை, பிரசங்கம், சற்பிரசாத ஆசீர்வாதம்.
,, 26-ந் திகதி மேற்றிராணியாண்டவர் அவர்களால் மாலை ஆராதனை.
,, 27-ந் திகதி காலை 7-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் பாடற்பூசை சொல்லப்பெற்று திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முதலாம் திருவிழா முடிவாகும்.

ஆனிமாசம் 27-ம், 28-ம், 29-ம், 30-ந் திகதிகளில்
தினமும் காலை 9-30 மணிக்கு ஒவ்வொரு காரணிக்கத்தின் விளக்க உரையுடன் செபமாலை தமிழில் செபிக்கப்படும்.
,, முற்பகல் 11-00 மணிக்கு மேற்சொன்னபடி ஆங்கிலத்தில் விளக்க உரையுடன் செபமாலை ஓதப்படும்.
,, பிற்பகல் 3-30 மணிக்கு மேற்படி விளக்க உரையுடன் சிங்களத்தில் செபமாலை ஓதப்படும்.
,, பிற்பகல் 4-00 மணிக்கு தமிழிலும் சிங்களத்திலும் தர்க்கப்பிரசங்கங்கள் செய்யப்படும்.

### பச்சாத்தாப சுற்றுப்பிரகாரம்

**29-ந் திகதி சாயந்தரம் 4-30 மணிக்குப் புறப்படும்.**

**சுற்றுப்பிரகார ஒழுங்குகள்**

சுற்றுப்பிரகார அணிவகுப்பில் தமிழ்வர்க்கத்தைச் சேர்ந்த யாத்திரிகள் செபமாலை மாதாவின் திருச்சுரூபத்துக்கு முன்னதாகப் புறப்படுதல் வேண்டும். சிங்களவர்க்கத்தைச் சேர்ந்த யாத்திரிகள் திருச்சுரூபத்துக்குப் பின்னால் செல்லவேண்டும். சுற்றுப்பிரகாரம் தொடங்கும்பொழுது கீர்த்தனைகள் பாடப்படும். சுற்றுப்பிரகாரவேளையில் எல்லோரும் பக்தியுடன் செபமாலை ஓதுகிறதுடன் சிலகாரணிக்கங்கள் சொல்லும்பொழுது தவத்தின் அடையாளமாக இருகைகளையும் விரித்தபடியே சொல்லுதல் வேண்டும். சத்தம் சந்தடிகள் ஆர்ப்பாட்டங்கள் ஒன்றும் சுற்றுப்பிரகார வேளையில் நடைபெறக்கூடாது. துவக்கு வெடிகள் பாட்டாசுகள் முதலியயாவும் முற்றாக விலக்கப்பட்டிருக்கின்றன. யாத்திரிகள் எல்லோரும் திருச்சுரூபத்தைச்சுற்றி வட்டமிடாமல் பக்திக்குரிய சுற்றுப்பிரகார அணிவகுப்பாய்ச் செல்லுதல்வேண்டும்.

திருச்சுரூபம் முற்றவெளிக்கு வந்தவுடன் ஆர்ப்பரிப்புக் கீர்த்தனங்கள் பாடப்படும்.

### மரியாயின் இரவு

**ஆனி மாசம் 30-ந் திகதியும் ஆடி மாசம் 1-ந் திகதியும்**

ஆனிமாசம் 30-ந் திகதி இரவு 10 மணிக்கு செபமாலை நாயகியின் திருச்சுரூபம் தேவாலயமுகப்பில் எழுந்தேற்றம் செய்யப்பெற்று தமிழில் ஒவ்வொரு காரணிக்கங்களின் வியாக்கியானத்துடன செபமாலை செபிக்கப்படும்.
,, இரவு 11-30 மணிக்கு திருமணித்தியாலம்.
,, ,, 12-30 ,, வந்தனைக்குரிய டக்டர் J. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்களால் திவ்விய பூசைப்பலி வியாக்கியானத்துடன் சொல்லப்படும்.

ஆடிமாசம் 1-ந் திகதி இரவு 10-00 மணிக்கு ஆலயமுகப்பில் சிங்களத்தில் வியாக்கியானத்துடன் செபமாலை சொல்லப்படும்.
,, இரவு 11-30 மணிக்கு திருமணித்தியாலம்.
,, ,, 12-30 ,, சலாப மேற்றிராணியாரான வந்தனைக்குரிய டக்டர் எட்மண்ட் பீரிஸ் ஆண்டவர் அவர்களால் சிங்களத்தில் வியாக்கியானத்துடன் திவ்விய பூசைப்பலி சொல்லப்படும்.

---

ஆடிமாசம் 1-ந் திகதி காலை 9-30 மணிக்கு யூபிலி ஞாபகார்த்தமாகக் கட்டப்படவிருக்கும் ஞானஒடுக்க மண்டபத்துக்கு அஸ்திபாரக் கல் நாட்டப்படும்.
காலை 9-45 மணிக்கு யூபிலி நாயகருக்கு வாழ்த்துப்பத்திரம் வாசிக்கப்படும்.
மாலை 7-00 மணிக்கு செபமாலை பிரசங்கம் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெற்றபின்னர் மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் வேஸ்பர் ஆராதனைபாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் கொடுக்கப்படும்.

ஆடிமாசம் 2-ந் திகதி காலை 7-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் பாடற்பூசை சொல்லப்பெற்றபின்னர் பக்திவிநயத்துடன் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெறும். சுரூபம் முகப்பை அடைந்ததும் சந்தோஷ ஆர்ப்பாட்ட தோத்திரங்களுடன் திருநாள் முடிவுபெறும்.

### நேர்த்தியின் பூர்த்தி

எமது புத்திரன் பீற்றர் தேவதாஸ்என்பவருக்கு ஒரு வலிப்பு உண்டாகி வருத்தியது. இவ்வலிப்பை மாற்றும்படி சாட்டி சிந்தாத்திரைமாதாவுக்கு நேர்த்திசெய்து பிரார்த்தித்தோம். வியாதி குணமடைந்தது. செய்துகொண்ட நேர்த்தியின்படி இதைக் காவலனில் பிரசுரிக்கின்றோம்.

எஸ். எம். தம்பிப்பிள்ளையும்
பாரியாரும்

மாட்டீன்றோட்
யாழ்ப்பாணம், 25-5-49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசவர்த்தமானம்

## இலங்கைத் தேயிலை

1947-ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையிலும்பார்க்க இரண்டு மடங்கு தேயிலை கடந்தவருடம் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கிறது. 1947-ம் ஆண்டில் அமெரிக்கா இலங்கையிலிருந்து 2,22,64,000 ருத்தல் தேயிலையைப்பெற்றது. 1948-ம் ஆண்டில் அது 4,53,29,000 ருத்தல் தேயிலையைப் பெற்றிருக்கிறது.

## ஆற்றில் குதித்தவர்கள்

வெண்ணப்புவாவெனுமிடத்தில் சூதாட்ட நிலையமென்று சொல்லப்படும் ஒரு இடத்தில் பொலிசாரும் கலால் சிப்பந்திகளும் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமையன்று திடீரென்று தோன்றியதன் காரணமாக சூதாடியதாகச் சொல்லப்படுபவர்களில் ஒருவர் மரணத்துக்குள்ளானார். சூதாட்ட நிலையத்துக்கு அவர்கள் திடீரென்று போயிறங்கியபோது W. S. யோசெவ்றெகர், பர்னாந்து பென்னப்பு ஆகிய இருவரும் மகா ஓயாவில் குதித்தார்களென்று சொல்லப்படுகிறது. பென்னப்பு என்பவர் ஆற்றைத்தாண்டி அக்கரைக்குப் போய்ச்சேர்ந்துவிட்டாரென்றும் மற்றவர் நீரில் மூழ்கிமரணமானாரென்றும் சொல்லப்படுகிறது.

## மின்சாரத்தினால் மரணம்

மிஹ்ராஜ் தினத்தை யொட்டித் தன் மாமன் வீட்டை மின்சார விளக்குகளால் அலங்கரிக்க முயற்சித்த நாஜிமுதீன் காசிம் என்ற 16 வயதுப் பையன் மின்சார அதிர்ச்சிக்கு ஆளாகிச் சென்ற வியாழக்கிழமை காலையில் அம்பாந்தோட்டை சிவில்ஆஸ்பத்திரியில் உயிர்துறந்தான். அந்தப்பையன் அம்பாந்தோட்டைச் சென்மேரீஸ் ஆங்கில பாடசாலை மாணவன் என்றும் அன்றையதினம் அவன் ஒருவாங்கின்மேல் ஏறிநின்றுகொண்டு மின்சார கம்பிகளைத் தொடுக்கும்போது அதிர்ச்சிக்கு ஆளானானென்றும் தெரியவருகிறது.

## கொழும்பு நூதனசாலை

கொழும்பு நூதனபொருட்காட்சிச்சாலை திருத்தியமைக்கப்பட்டுவருகிறது. மிருகங்களை அவைகளின் இயற்கை சூழ் நிலைமையில்வைக்க புதியஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்புதிய ஏற்பாடுகள் நூதனப்பொருட்காட்சிசாலைக்கு விஜயஞ்செய்யும்ஆயிரக்கணக்கான பள்ளிமாணவர்களுக்கு கல்விபுகட்டும் முறையில் அமைந்துள்ளன. பாம்பு, மீன், யானை போன்ற மிருகங்களின் இயற்கைவாழ்வைத் தத்ரூபமாகச் சித்தரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாதிரியே சரித்திர காலத்திற்கு முந்தியிருந்த மிருகங்களின் வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொள்ளவும் ஏற்பாடு செய்யப்படும். நூதனப்பொருட்காட்சிசாலையில் நூதனப் பொருட்காட்சிசாலையில் நூதனப்பொருட்களை பார்வைக்குவைக்க புதிய கண்ணாடி மூடிகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இவைகள் பம்பாய் நூதனப்பொருட்காட்சிசாலையிலுள்ள கண்ணாடிமூடிகளைப்போன்று இருக்கும்.

## இறக்குமதி ஏற்றுமதி

இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாகும். ஏற்றுமதியைவிட 819,91,000 ரூபாவுக்கு அதிக இறக்குமதி இந்நான்கு மாதங்களில் ஆகியிருக்கிறது. சித்திரைமாத துறைமுகவருமானக்கணக்கிலிருந்து இவ்விபரம் தெரியவருகிறது. கடந்த சித்திரைமாதத்தில் 60,532.267 ரூபா பெறுமதியுள்ள சாமான்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வருடத்திலேயே மிகக்குறைந்த ஏற்றுமதி மாதம் சித்திரையாகும். இம்மாதத்தில் 98,171,034 ரூபா பெறுமதியான சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. உணவுப்பொருள்கள் தானியங்கள் மட்டுமே 441041,215 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

## இலங்கைத் தேசீயக் காங்கிரஸ் மகாநாடு

இலங்கைத் தேசீயக் காங்கிரசின் விசேஷ மகாநாடொன்று அதன் தலைவர் திரு. ஜோர்ஜ் ஈ. டி சில்வாவின் தலைமையின்கீழ் கடந்த சனிக்கிழமையன்று கொழும்பு சஹிறுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. காங்கிரசைக் கலைத்துவிடவேண்டுமென்று நிதிமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொண்டுவந்த ஒரு பிரேரணையைத் தலைவர் திரு. ஜோர்ஜ் ஈ. டி சில்வா ஒழுங்கற்றதென்று நிராகரித்து விட்டார். இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டதால் இலங்கைத் தேசிய காங்கிறஸ்இலட்சியம் நிறைவேறி விட்டதென்றும் அதனால் காங்கிறஸ் கலைக்கப்பட வேண்டுமென்றும் நிதிமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தமது பிரேரணையின்பேரில் பேசுகையில் கூறினார். நிதிமந்திரியின் கலைப்பு யோசனையை எதிர்த்துப் பலர்பேசினார்கள். காங்கிறஸ் ஸ்தாபனத்தைக் கலைப்பது பற்றி விவாதித்து முடிவுசெய்யக் காங்கிரசின் பொதுக்கூட்டமொன்று கூட்டப்பட வேண்டுமென்று தலைவர் திரு. ஜோர்ஜ் ஈ. டி சில்வா கூறினார். கர்ங்கிரசைக்கலைக்கும் யோசனையைப்பற்றி ஆலோசிக்க இலங்கைத் தேசீயக்காங்கிரசின் பொதுக்கூட்டமொன்றைத் தான்கூட்டப்போவதாகவும் அதில் இது சம்பந்தமாக அவைகளுடைய அபிப்பிராயங்களைஎடுத்துக்கூறஎல்லாக்கிளைச் சங்கங்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்றும் தலைவர் திரு. ஜோர்ஜ் ஈ. டி சில்வா கூறினார்.

## யானைக்கால் நோய்

இலங்கையில் யானைக்கால் நோயை ஒழிக்கும்பொருட்டு, உலகின் மற்றநாடுகளில் இந்த நோயை ஒழிக்கஉபயோகிக்கப்படும் நவீனமுறைகள் இங்கும் உபயோகிக்கப்படவிருக்கின்றன. அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின் விளைவாகக்கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஹெட்ரஸன் என்ற ஒரு நூதன மருந்தைக்கொண்டுயானைக்கால்நோய்த் தடைஇயக்கத்தைத் தீவிரமாக நடத்திவைப்பதற்குள்ள நடவடிக்கைகளை தெஹிவளையிலுள்ள யானைக்கால் நோய்சிகிச்சைஆஸ்பத்திரியில்சுகாதார மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக இம்மாதம் 1-ந்திகதி ஆரம்பித்துவைத்தார்.

## க்ஷயரோகத்தடைப் பிரசுரம்

க்ஷயரோகத்துக்கெதிராக நடத்தப்படும் போராட்டம் ஒரு சமூகப்போராட்டமாக இருக்கவேண்டும்; ஆரம்பத்தில் இந்நோயைக்கண்டு பிடித்தால் அதைச் சுலபமாகக் குணப்படுத்தமுடியும். “க்ஷயரோகமென்றால் என்ன”? என்ற பெயரையுடைய இப்பிரசாரப் புத்தகத்தில் இவ்விதமாக சம்பாஷணை முறையில் கூறப்பட்டிருக்கிறது இப்புத்தகம் வைத்திய சுகாதாரப்பகுதியாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் அரசாங்கக்ந்தோரிலும் வர்த்தகக் கந்தோர்களிலும் பொதுசனங்களுக்கு விநியோகிக்கப்படும்.

## ரூபா 75 மட்டுமே

இலங்கையிலிருந்துவெளியேசெல்லுகிறவர்கள்இனி 75 ரூபாவுக்குமேல்கொண்டுபோகக்கூடாது. இது சம்பந்தமாக நிதிமந்திரி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன பிறப்பித்துள்ள உத்தரவு கடந்தவெள்ளிக்கிழமை வெளியான கெசற்றில் பிரசுரமாயிருக்கிறது. இதற்கு முன் ஒரு பிரயாணி 140 ரூபா கொண்டு செல்லலாமென்றிருந்தது.

## துணை ஆயர்
## மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை
## மேற்றிராணியாண்டவருக்கு
## ஊர்காவற்றுறை
## வரவேற்புக்கொண்டாட்டம்

சென்ற வைகாசி மாதம் 29-ந்திகதி சனிக்கிழமை காவலூரின் குருப்பிரசாதியும் முதல் தமிழ்மேற்றிராணியாருமாகிய மகாவந். J. எமிலியானுஸ்பிள்ளை O. M. I. ஆண்டவரவர்களுக்குக் காவலூரில் ஓர்பரிமளிப்பான வரவேற்புக் கொண்டாட்டம் நடக்கலாயிற்று.

அன்று பின்னேரம் ஐந்து மணியளவில் மேற்றிராணிஆண்டவர் அவர்கள் இருபது குருமார் சமேதராய்க் காரைதீவுப்பாலத்தை அடைந்ததும் அவருக்கென அழகாய் ஆயத்தப்படுத்திய நாவாய் ஒன்றில் அவரைவரவேற்று அழைத்து ஊர்காவற்றுறைப் பாலத்தைஅடைந்தனர்.காவலூர்துறைமுகத்தில் கட்டியிருந்த கணக்கற்ற பாய்க்கப்பல்களிலும், மோட்டோர்வள்ளங்களிலும தோணிகள் மச்சுவாய்களிலும் பன்னிறத்துவசங்கள் இழுக்கப்பட்டுத் துறைமுகம் அளித்த காட்சியோ வெகு மாட்சியாயிருந்தது. அவர் ஏறிவந்த நாவாயைச்சுற்றி மோட்டோர்வள்ளங்களும் மச்சுவாய்களும் அவருக்கு மரியாதைகாட்டும் பாவனையாய் வெடிகளதிர சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டிருந்தன. பாலத்தை அடைந்ததும் காவலூர் மக்கள் சார்பில் அவருக்கு மாஜி மணியகாரர் S. சந்தியாப்பிள்ளை அவர்களால் ஓர்மாலையிடப்பட்டு அவருக்கென பாலத்தின் அண்மையில் இடப்பட்டிருந்த அழகார்ந்த பந்தரில் ஆண்டவரவர்கள் ஆசனத்தமர்ந்தனர்.

பின்காவலூர்நாலுகோயில்முகாமைக்காரர், சக்கிறிஸ்தாமாராலும் மாலைகள் இடப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட கிறீஸ்தவர்களும் பிறசமய பிரமுகர்களும் அரசாங்க உத்தியோகஸ்தரும் பிறரும் திரளாய்க்கூடி இருந்தனர். பாடசாலைப் பிள்ளைகளால் இனியகீதங்கள் பாடப்பட்டன. மணியகாரன் சந்தியாப்பிள்ளை அவர்களால் ஓர் வாழ்த்துப்பத்திரம் படிக்கப்பட்டு, தெட்சணையும் வழங்கப்பட்டது. மேற்றிராணியாண்டவரவர்கள் தமக்குக் கூறியவற்றிற்கெல்லாம் தக்கபதில் கூறி ஆசீர்வாதம் அளித்தனர். இவ்வூர் இந்துக்கள்சார்பிலும் விசேஷமாய் இவர்கள் மேற்றிராணிஆண்டவர்அவர்களில்கொண்டிருக்கும் விசேஷவணக்கநேசத்தைக்காட்டும் அறிகுறியாக அவருக்கு ஓர்புஷ்பாரமும் சூட்டப்பட்டது.

பந்தர்வரவேற்புமுடிந்ததும்அலங்காரமாய்ச் சோடிக்கப்பட்ட தெருவீதிகள் வழியாய் ஆண்டவரவர்கள் பவனியாய் வெடிகள் அதிர நாலுகோவில் மணிகள் ஆர்ப்பரிக்க நட்டுவமுட்டு நாதசுரவாத்தியங்கள் கோஷிக்க, காவலூர்மக்கள் சந்தோஷசாகரத்தில் ஆர்ப்பாட்டமிடத் தேவமாதாகோவில்சென்று ‘தெதேயும்’ என்னும் தேவதோத்திரப்பாடல் பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். ஆசீர்வாதத்தின் பின் கிறீஸ்தவர்களும் பிறரும் குருமனையில் ஆண்டவரைத் தரிசித்து திருக்கரமுத்திசெய்து ஆசீர்வாதமும் பெற்றார்கள். சமுகமானவர்களுக்கு ஓர் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அடுத்தநாள் மேற்றிராணியார்தமது பங்குக் கோவிலாகிய கரம்பன் அர்ச். செபஸ்தியார் கோவிலில் ஓர் பாடற்பூசையும் நிறைவேற்றினர். பின் பரிமளிப்பான ஓர்வரவேற்பும் அதனோடொட்டிய மற்றும் விழாக்களும் சிறப்பாய் நிறைவேறித் தெட்சணைகளும் வழங்கப்பட்டன. புதிய மேற்றிராணியாருக்கு நீடிய ஆயுளும் வச்சிரதேகமும் அவர் கையிடுங் கருமங்களில் நிறைவான வரப்பிரசாதமும் எல்லாம் வல்ல இறைவன் மழைமாரியாய்ப் பொழிவாராக.

—நிருபர்

# கொழும்புத் தபால்

## நமது நிருபர்

### குதூகலம்

யாழ்ப்பாணத்தில் சென்ற 22-5-49 இல் மிக வண. ஜே. எமிலியானுஸ்பிள்ளை O.M.I., சுவாமிகளின் திருஅபிஷேகத் திருவிழா முடிவடைந்துவிட்டது. யாழ்ப்பாணத்திலும் பார்க்கக் கொழும்பே ஆண்டவரில் உரிமை அதிகம் கொண்டாடுகிறது. ஆண்டவர் அவர்கட்கு கல்வியமுதுடன் ஞானப்பாலை ஊட்டிவளர்த்த அர்ச். டீ லாசாலின் புத்திரர்களான கிறிஸ்தியன் விறதர்மார் கொள்ளும் குதூகலத்துக்கு அளவில்லை. ஆண்டவர் கல்வியமுதருந்திய அர்ச். ஆசீர்வாதப்பர்கல்லூரியே முதல்இலங்கைசுதேசமேற்றிராணியாரையும், முதல் யாழ்ப்பாணத் தமிழ் மேற்றிராணியாரையும், திருச்சபைக்குஅளித்திருக்கிறது. ஆண்டவர் அவர்கள் கொழும்புக்கு வரும்போது அவரை வரவேற்பதற்கு முஸ்திப்புகள் நடைபெறுகின்றன. அர்ச். ஆசீர்வாதப்பர்கல்லூரி மாணவர்கள்ஆண்டவர் வரவால் தங்களுக்கு ஒருநாள் விடுதலை கிடைக்குமென்று இப்பொழுது துவங்கியே மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள்.

### அதிபர் தினம்

அர்ச். ஆசீர்வாதப்பர் கல்லூரி அதிபராகிய சங். விற. ஒஸ்ரின் அவர்களின் பெயர்கொண்ட நன்னாளை பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆடல், பாடல், சிற்றுணவு விருந்துஆகிய உபசாரங்களால் கொண்டாடினார்கள். மழையிற் கூட விளையாடினார்கள்.

### பெருமழை

கொழும்பிற் பருவமழை பெய்யும் காலமாதலால் மழை பொழிந்துகொண்டிருக்கிறது. களனி ஆறு சீற்றமுற்று வெள்ளப்பெருக்கு ஏற்படாதபடி அணைகளைப் பெலப்பித்தும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் வெள்ளத்தாற் பாதிக்கப்படுவோருக்கு உதவிசெய்ய நடவடிக்கைகளை எடுத்தும் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

### வானொலியில் தமிழ் நிகழ்சிகள்

கொழும்புவானொலித் தமிழ் நிகழ்ச்சிகள் சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்வதற்குக் கௌரவ மந்திரி ஸ்ரீ சிற்றம்பலமவர்கள் துணிந்துவிட்டார்கள். மந்திரிக்கு வேண்டிய யோசனைகளைக்கூற அடையாறு கலாசேத்திர நிர்வாகிய பேராசிரியர் ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் இலங்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். இவரின் வரவால் தமிழ் நிகழ்ச்சிகளின் தரம் உயருமென்று றேடியோ அபிமானிகள் கருதுகின்றனர்.

### செனேட்டர் மந்திரி தகராறு

செனேட்டர் நாகநாதனைத் தாக்கி கௌரவ ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசிய குறிப்பொன்று இலங்கை வானொலியில் அஞ்சல் செய்யப்பட்டதாம். செனேட்டர் நாகநாதன் அரசாங்க பரிபாலனத்தில் நடத்தப்படும வானொலிநிலையம் மேற்படி செயலால் தமக்கு அநீதிசெய்துவிட்டதென்று றேடியோப் பகுதிக்குப் பொறுப்பான மந்திரி ஸ்ரீ சிற்றம்பலத்துக்கு முறையிட்டுக்கொண்டார். மந்திரியவர்கள் மேற்படி விஷயத்தைத் தீர விசாரணை செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறார்.

---

—நாகபுரியிலுள்ள கணேசகங்காதர தேசிகர் என்ற ஆசிரியர் ஒருவர் இவ்வருஷம் நடைபெற்ற சர்வகலாசாலைப் பரீட்சைகளில், மராட்டியபாஷையில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளார். இவருக்குஇப்பொழுது 62 வயது. இரண்டு வருஷங்களுக்கு முன்னே, தமது 60-ம் வயதிலேதான் இவர் பி. ஏ. பட்டதாரியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத வினாவிடை

— II —

### பிதாவானவர் எங்கள் தேவாதீனர்

(4) மனந்திருப்புதல்

79. மனந்திருப்பும் பிரசாதம் ஆவது என்ன ?

நாம் சோதனையில் உட்படாமல் அல்லது உட்பட்ட சோதனையிலிருந்து விலகச் செய்வதும் சுபாவத்துக்கு மேலானதுமான தேவஉதவியே மனந்திருப்பும் பிரசாதமாம்.

"உம்மாலே நான் சோதனையிலிருந்து இரட்சிக்கப்படுவேன்" — சங். XVII. 29.

"எங்கள் இரட்சணியமாகிய கடவுளே ! எங்களை மனந்திருப்பியருளும்" — சங். LXXXIV. 4.

80. நாம் எந்த விண்ணப்பத்தினால் பிதாவிடத்திலிருந்து மனந்திருப்பும் பிரசாதத்தைக் கேட்கிறோம் ?

"எங்களைச் சோதனையிலே உட்படவிடாதேயும்" என்ற விண்ணப்பத்தினாற் கேட்கிறோம்.

81. சோதனை யாவது என்ன ?

நாம் பாவத்தைச் செய்யும்படி அல்லது பாவசமயத்தைத் தேடும்படி தூண்டிவிடப்படுவதே சோதனையாம்.

82. நமக்குச் சோதனை எவ்விதமாய் வருகிறது ?

பசாசின் தந்திரங்களினாலும், உலகத்தின் மாய்கைகளினாலும், நமது ஆசாபாசங்களினாலுமே சோதனைவருகிறது?

"விழிப்புள்ளவர்களாயிருங்கள் : ஏனெனில் உங்கள் சத்துருவாகிய பசாசு கர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல் யாரை விழுங்கலாமோவென்றுதேடிச்சுற்றித்திரிகிறது" — 1. இரா. V. 8.

"இடறலினிமித்தம் உலகத்துக்கு ஐயோ கேடு ! ஏனெனில் இடறல்கள் கட்டாயம் வந்துதான்தீரும் ; ஆயினும் எந்த மனுஷனால் இடறல்வருகிறதோ, அவனுக்குஐயோ கேடு !" —மத். XVIII. 7

"அவனவன் தன் சுய இச்சைகளால் இழுபட்டு, மருண்டு, சோதனைப்படுகிறான்"—இயா. I. 14.

83. பசாசுகள் எனப்படுகிறவர்கள் யார் ?

ஆங்காரத்தினால் மோட்சத்தையிழந்து நரக ஆக்கினைக்குள்ளான கெட்ட சம்மனசுகளே பசாசுகள்.

84. பசாசுகள் நம்மைச்சோதிப்பது ஏன் ?

தாங்கள் இழந்து போன மோட்சத்தை நாம் அடையப்போகிறோம் என்ற காய்மகாரத்தினாலேயாம்.

85. பசாசு முதன்முதல் ஆரைச் சோதித்தது ?

முதல் மனுஷியாகிய ஏவாளைச் சோதித்தது.

"ஏவாள் : சர்ப்பம் என்னைமோசம் பண்ணினதினால் புசித்தேன் என்று பிரதி கூறினள்" —ஆதி. III. 13.

86. பசாசு யேசுநாதரையும் சோதித்ததா ?

ஆம். அவரையும் சோதித்தது.

"யேசுநாதர் இஸ்பிரீத்துவினால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கே நாற்பது நாளிருந்து, பசாசினால் சோதிக்கப்பட்டார்" — லூக். IV. 1—2.

87. உலகத்தின் மாய்கைகள்எவை ?

நல்லொழுக்கத்திற்கு எதிராகநம்மை அணுப்பக்கூடிய ஆட்கள், சபைகள், காட்சிகள், வழமைகள், கிரித்தியங்கள், புத்தகங்கள், இடங்கள் முதலியனவாம்.

88. ஆதாமைச் சோதித்தது ஆர் ?

அவனுடைய மனைவியாகிய ஏவாள் தான்.

"ஆதாம் : எனக்குத் துணைவியாகத் தேவரீர் தந்தருளின அந்த ஸ்திரீதானே அம்மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தனள் ; நான் அதில்புசித்தேன், என்றான்" —ஆதி. III. 12.

89. நமது ஆசாபாசங்கள் எவை ?

உலகநன்மைகளிலே, விசேஷமாய்ச் சரீரத்தை அடுத்தவைகளிலே, நமக்கு இருக்கும் மிதமிஞ்சின இச்சைகளாம்.

90. நாம் ஏன் சோதனையில் உட்படாமலிருக்கவும் உட்பட்டசோதனையிலிருந்து விலகவும் வேண்டும் ?

ஏனெனில் சோதனை நமது ஈடேற்றத்தின் வழியாகிய தேவசித்தத்தைப் பின்தொடருதலுக்குத் தடையாய் இருக்கிறது.

91. சருவேசுரன் ஏன் நாம் சோதிக்கப்படவிடுகிறார் ?

நாம் பலவீனர் என்று கண்டுணர்ந்து சருவேசுரனிலே நம்பிக்கை வைக்கவும், சோதனைகளைப் பிரசாத உதவியால் செயித்துப் புண்ணியங்களில் வளரவும், அதனால் நமது நித்திய சம்பாவனையை அதிகப்படுத்தவுமே நாம் சோதிக்கப்பட விடுகிறார்.

"சோதனையைச் சகிக்கிறவன் பாக்கியவான். ஏனெனில் அவன் பரீட்சிக்கப்பட்டபின், சர்வேசுரன், தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின சீவியகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவான்" —இயா. I. 12.

92. நாம் செயிக்கமுடியாத சோதனைகளைச் சருவேசுரன் நமக்கு வரவிடுவாரோ ?

இல்லை. நாம் பிரசாத உதவியாற் செயிக்க முடியாத சோதனைகளைச் சருவேசுரன் நமக்கு ஒருபோதும் வரவிடமாட்டார்.

"சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர் ; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார். ஆனால் நீங்கள் சோதனையைத் தாங்கும்படி சோதனையோடு வழியும் பண்ணுவார்" —1. கொரி. X. 13.

93. சோதனைகளைச் செயிக்கும் வழிவகைகள் எவை ?

பாவச்சமயங்களை விட்டுவிலகுதல், ஒறுத்தல்செய்தல், சாவு தீர்ப்பு மோட்சம் நரகம் எனும் கடைசிமுடிவுகளை ஞாபகப்படுத்திக் கொள்ளல், நம்பிக்கையோடு செபித்தல், திவ்விய அனுமானங்களை அடிக்கடி பெற்றுக்கொள்ளுதல் ஆதியவைகளாம்.

"ஆபத்தை நேசிக்கிறவன் அதிலேயே அழிவான்" —சர்வப். III. 27.

"உன்சகல கிருத்தியங்களிலும் உன் கடைசிமுடிவுகளை நினைத்துக்கொள் ; ஒருபோதும் பாவஞ் செய்யமாட்டாய்—சர்வப். VII. 40.

"இவ்வகைப் பசாசோ, செபத்தினாலும் உபவாசத்தினாலுந் துரத்தப்படுமேயொழிய மற்றப்படி துரத்தப்பட மாட்டாது" — மத். XVII. 20.

---

## ஆண்டாங்குளமும் மெய்விவாகமும்

பண்டைக்காலத்தில் பலகிராமங்களைத் தன்னுள்அடக்கி இராசதானியாய் விளங்கியதின்நிமித்தம் காரணப் பெயர் புனைந்து கியாதிகொண்டு விளங்கிய ஆண்டாங்குளம், பிரயாணவசதியற்றுப் பலவிதத்திலும் நன்மைகள் குன்றியகாரணமாக நாளடைவில் "உலக்கைதேய்ந்துஉளிப்பிடியானதே' போல், கிராமவாசிகள் வேற்றூர்சென்றதின்நிமித்தம் குடிகுறைந்து குக்கிராமமாகி ஈற்றில் கிராமமே இல்லாதொழிந்துபோகும்தறுவாயிலிருக்கும்பொழுது வண. லெபோன்சுவாமியார் அவர்கள் கட்டளைக்குரவராய் இங்கேதோற்றினார். இவருடைய போதகத்தினாலும் பிரயாசத்தினாலும் பலர் சத்தியமறையிற்சேர்ந்து கத்தோலிக்கரானதால் ஓர் கோவிலும் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கிராமம் சுவாத்தியத்துக்கேற்ற இடமாய் இருந்ததுபற்றி 'சின்னநுவரெலி' யெனும் சிறப்புப் பெயர் சூட்டினார். அரசாட்சியார் இக்கிராமத்தில்கரிசனைகொள்வார்களானால் இக்கிராமம் முன்னேற்றமடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இக்கிராமத்திலுள்ள சம்மிக்கேல் அதிதூதரின் கோவிலில் சென்ற 14-5-49 இல் முதன்முதலாக ஓர் மெய்விவாகம் நிறைவேற்றப்பட்டது. மணமகன் முல்லைத்தீவு நீக்கிலஸ் டேவிற் அவர்களின் கனிஷ்ட புத்திரனும், யாழ்ப்பாணத்தில் அரசாங்க தொண்டாற்றும் ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் சோதரனும், அளம்பில் அர்ச். அந்தோனியார் பாடசாலைத் தலைமைஆசிரியருமாகிய திரு. மரியநாயகம் யேம்ஸ் அவர்களாகும். மணமகள் அளம்பில் அர்ச். அந்தோனியார்கோவில் மூப்பரும் பிரபல சுதேச வைத்தியரும் பல சங்கங்களின் அக்கிராசனரும் கிராம,-கிராமமுன்னேற்ற, சுகாதார, கமத்தொழில் கஷ்டநிவாரணமுதலிய பலசங்கங்களின் அங்கத்தவரும் ஆண்டாங்குளம் சம்மிக்கேல் பாடசாலையின் தலைமைஆசிரியருமாகிய திரு.பி.வி.மிக்கேற்பிள்ளை அவர்களின் சிரேஷ்டபுதல்வியும், கரிக்கட்டுமூலை தெற்குப்பகுதி உடையாராகிய திரு. எவ். ஏ. பெர்னாண்டோ அவர்களின் பெருமகளுமாகிய திருமதி ஞானரெத்தினம்மா தங்கமணியாம். இவ்விவாகம் வண. ஸ்கூர்மன் சுவாமிஅவர்களால் நிறைவேற்றப்பட்டு வீண் ஆடம்பரங்களின்றி அமைதியாகவும் சாதி சமய ஆசாரப்படியும் கொண்டாடப்பட்டது. இக்குடும்பம் ஆல்போல் தழைத்து அறுகுமோல் வேரூன்றிப் பதினாறும்பெற்றுப் பல்லாண்டு வாழுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

—கடிதர்.

---

—மேற்கு ஜேர்மனியை ஒரு தனி இராச்சியமாக்குவதற்கான அரசியல் திட்டத்தை 11 மேற்கு ஜேர்மன் மாகாணங்களில் 10 மாகாணங்கள் அங்கீகரித்துவிட்டன.

---

## கத்தோலிக்க தமிழ் மக்களின் வீரமுழக்கம்

(P. T. செல்வம்)

1. தூயவனாய்த் துறவறனாய்த் துணையுருவாய்த் துலங்கும் சோதி
சேயவனாய்ச் செகம்புகழச் சிரித்தசெஞ் சுடர்முகனாய்
மாயவனாய் மனுவுருவாய் மரிமடி யிருப்பவனாய்
காயவனாய் யேசுகா ஆயனெனும் ஆசியனாய்,

2. சத்திய மாமறையின் தந்தை வளர்த்தமுன் மைந்தனென்றே
நித்தியமாய் நெஞ்சங்கோணா நிறைந்தபொற் செல்வனென்றே
இத்திய வுலகுவாழ ஈந்தவெம் மன்னை கியோமர்
பத்திய எம்லியானுஸ் பதவியின் பருதிபோன்றே

3. ஈனமே மலிந்தவாழ்வு மாத்திலே கனிந்தவின்ப
மோனமே சிறக்கும் மோட்சமுடி பெறு கனியுமானாய்
வானமே வறண்ட துந்தன் வள்ளண்மை பலவுங்கண்டு
கானமே முழங்கும் செங்கோல் கரத்துடன் வருதலுண்டு.

4. யாழ்நகர் மக்கள் நாங்கள் நடந்தடைந் திட்டோம் நாளும்
பாழ்நுகர்ந் துடைந்த நெஞ்சம் பலதிசை ஓடிச்சென்றே
வீழ்ந்திறந் தலகைசூழு மனவிடை மருவிமாளா
தாழ்மலர்ப் பாமனிட்ட தயவினால் எமலியானுஸ்

5. மாசில் மாணிக்கமுன்னை மக்கள் நந்தமிழ் தாயேற்றிப்
பேசில் ஓர்பெருமை கொள்வான் பெருமிதத் துடனேசென்று
காசில்யார் பெறுவார் என்பாள் கணக்கணம் களிப்பா லுந்தி
தேசில்நீ சிறந்தாய் ! செல்வா ! சென்றுவா ! என்று சொல்வாள்.

6. மாமரி சபையிற் புக்கு மங்கலக் குரவ னாகித்
தாமுரியவனாய் எங்கள் தலைசிறந்துய்ய வண்ணம்
நீபுரி வினைகள், கல்வி, சமயசாதீன மின்றித்
தேமுரி தமிழ்த்தாய் தந்ததிறல்வனே தினம்நீ வாழி !

7. மெய்யுயர் சமாதனம், சமரசம், ஒற்றிணைப்பு
எய்துயர் ஸ்பிரீத்தின் எழிபெறு திடனும்கொண்டு
பெய்யுயர் சமாதானப் பந்தனத் துடன் போரவி
உய்யும் வாக்குவகை கொண்டான் உவப்புடன் சிரமேல் சூடி,

8. எங்கணும் இன்பம் பொங்கி எம்முயர்த் தவனைவாழ்த்தித்
தங்கணும் தகைமைபூண்ட தயவினைத் தலத்தே வாழ்த்தித்
சங்கொலி முழக்கம் செய்வோம் சலசல வெனவே சொல்வோம்
இங்கெழில் பல்வும் செய்வோம் எம்துணை ஆயர் கண்டே !

---

## தேகவியோகம்

யாழ்ப்பாணம் பாஷையூர் வாசராயிருந்து காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் திரு. வ. யாக்கோபு என்பவரின் நேசபத்தினியும், யாழ்ப்பாணத்திலே நன்கு அறியப்பெற்ற ஆயுர்வேத வைத்தியர் திரு. சேலிஸ், திருமதி சொர்ணம்மா, திருமதி தெரேசம்மா, ஆயுர்வேத வைத்தியர் (மரியாம்பிள்ளை) அப்புத்துரை ஆகியோரின் அருமைத் தாயாருமான திருமதி சுவக்கீனா என்பவ சிலநாட்களாய் வயிற்றோட்ட வியாதியினால் பீடிக்கப்பட்டு எவ்வித வைத்தியசிகிச்சையாலும் குணமுறாது அந்திய தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இனசனர் கண்ணீர்உகுத்து நிற்கத் தமது 70-ம்வயதில் 24-5-49 செவ்வாய்க்கிழமை அதிகாலையில் மண்ணுலகை நீத்தா. பிற்பகல் 5 மணியளவில் வண. வோஷன்பெறி சுவாமியார் துக்கசங்கீதம்பாட, பெருந்திரளானோர் பின்செல்ல, சடலம் வைக்கப்பட்ட பேழையை வெண்பரிபூட்டிய இரதம் இழுத்துச்சென்று சேமக்காலையில் பூமதானம்செய்யப்பட்டது.

இவ்வின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மறுநாள் பாஷையூர் அர்ச்.அந்தோனியார்கோவிலில் வண. ஜே. நீக்கலாஸ் சுவாமியாரால் ஓர் துக்கப் பாட்டுப்பூசை சொல்லப்பட்டது. இதனைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் இவ்வின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். R. I. P.

---

—மேற்கு வங்காள அரசினர், அரசாங்க ஊழியர்கள் பொது ஸ்தலங்களில் மதுபானம் செய்வதைக் கண்டித்து ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளனர். பிரதம காரியதரிசியினால் வெளியிடப்பட்டிருக்கும் அந்தச் சுற்றுநிருபத்தில், அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களின் மத்தியில் மது மயக்கத்தோடு ஊடாடக்கூடாது என்றும், அவர்கள் ஏற்படுத்தும் எவ்விதமான கொண்டாட்டத்திலும் மதுபான வஸ்துக்கள் வழங்கப்படக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க மக்களின் பொறுப்புகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானவைகளை வென்று நடப்போரும் தப்புகின்றனர். விசுவாசத்துக்கு விரோதமானவைகளை வெல்ல அல்லது விலக்கச் சக்தியற்றோர் நவநாகரிக மயக்கத்தால் வெல்லப்பட்டு அவிசுவாசத்துக்கு ஆளாகின்றனர். தற்காலச் சாதாரண சீவியமே வரவரக் கத்தோலிக்க நன்னெறிக்கு முரணாகிக்கொண்டு வருகின்றமையால் கத்தோலிக்க விசுவாசம் சகிக்கவேண்டிய இக்கட்டு நெருக்கடி அதிகரிக்கின்றது.

மக்களிடையே நாளுக்குநாள் மலிந்துபெருகிவரும் துராசாரங்களையும் தீயவொழுக்கங்களையும் கண்டிக்கத்தகுந்த பிரசித்த அபிப்பிராயம் மனித சமூகத்தில் வளர்ந்துவாராமையால் கத்தோலிக்க ஒழுங்குகளுக்கு அடங்கிநடப்பவர் சகிக்க வேண்டிய பாவச்சோதனைகளும் இன்னல்களும் பலவாகும். ஆகவே விசுவாசிகளுட் பலர் வேதஅறிவில் தேய்வடைந்து, குருவழிச்செல்லாது, "உலகமேசதம்: உலகத்தில் உயர்வதே கதி மோட்சம்" என்ற மனப்பான்மையுள்ள அஞ்ஞானிகளைப்போல் வாழவும் நேரிடுகின்றது. இப்படிப்பட்டவரைக் குருவானவரைவிட வேதத்தை அனுசரிக்கும் விசுவாசியே நன்னிலைக்கு நயம்படக் கொண்டுவருதல் கூடும். சாதாரண கத்தோலிக்கனுடைய சீவியத்திலிருந்தே திருச்சபை கணிக்கப்படுகின்றது. இதனால் நாம் மேலே சுட்டிக்காட்டிய பாப்பரசரது, நிருபம் "சாதனையின் அதிகாரத்தாலும்விசுவாசத்தைஇடைவிடாது காட்டுவதனாலும்" சாதாரண கத்தோலிக்கன் அப்போஸ்தொலிக்க தொண்டைச் செய்யலாம்என்று கூறுகின்றது. மேலும் "கல்விகற்பித்தல் போன்ற உயரிய ஸ்தானத்திலிருப்போர் தத்தம் பேச்சினாலும் எழுத்தாலும் களங்கமற்றவிசுவாச வெளிச்சத்தை நேரடியாகவே" மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டலாம்.

சாதனையினால் விசுவாசத்தைப் பரப்புவதே சிறந்தவழி. தற்காலஉலகமோ மற்றோரைக் கண்டுபாவிக்கும் முறையையே கொண்டுள்ளது. தனக்குமுன் தோன்றும் உதாரணங்களை அநுபவத்தில்கண்டு அவைகளிலிருந்து பொது விதிகளை, சாத்திரவிதிகளை வடிகட்டி எடுப்பதே தற்கால மனிதனின் இயற்கைக்குணமாய்விட்டது. பிறர்நேசமுள்ள நாலுகத்தோலிக்கரைக்காணும் ஒருவன் கத்தோலிக்கர் எல்லோரும் பிறர்நேசமுடையவர்கள் என்ற முடிவுக்கு வருகின்றான். அவ்வித முடிவுக்குவரும்ஒருவன் கத்தோலிக்கமதத்தைநோக்கி அரைவாசிவழி நடந்துவிட்டான்என்றே சொல்லவேண்டும். என்னே! சாதனையின் சக்தி! என்னே! முன்மாதிரிகையின் மேன்மை!

(தொடரும்)

## காங்கேசன்துறை விமானநிலையம்

காங்கேசன்துறை விமானநிலையத்தைத் திறமான ஒருநிரந்தரநிலையமாகத் திருத்தியமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இது சம்பந்தமாகப் பரிசீலனை நடத்துவதற்காகத் தற்காலிக விமானப்போக்குவரத்துத் தலைவர் திரு. டேவிட் பீரிஸ், எயர் ஸிலோன் நிர்வாக ஆலோசகர் திரு. ஐ. எச். திராபோஸ்கி, துறைமுகப்பகுதி பிரதம உத்தியோகஸ்தர் திரு. ஏ. ஈ. கிறிஸ்தோபெல்ஸ், பொது மராமத்துப் பகுதி சிற்பி திரு. ஜஸ்டின சோமசேகரா, தந்திப்பகுதியைச்சேர்ந்த திரு. டி. கனகசுந்தரம் ஆகியோர் இவ்விமான நிலையத்துக்குச் சமீபத்தில்விஜயம்செய்தனர். இலங்கைக்கு வரும் விமானங்கள் முதலில் இங்கு இறங்குவதால் ஒரு முதல்தரமான விமானநிலையமாக இதை மாற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்நிய பிரயாணிகள்தங்குதற்கு ஒரு தனி மண்டபம்அமைக்கப்படும்.

## சத்தியங்கண்ட சமசயவாதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலேறினர். ஹய்பாவிலிருந்து மோட்டரிலேயே பிரயாணஞ் செய்து நசரேத், கானா, மக்தலா, பெத்லகேம், ஜெருசலேம், கல்வாரிமுதலிய இடங்களையெல்லாம் பார்வையிட்டார். புண்ணியபூமியில் பிரயாணஞ் செய்த புல்டனின் மனோநிலையையும் உணர்ச்சிகளையும் அவரே கூறக்கேட்போம்.

"நான் முன் பத்திரிகைகளிலும் பிரயாண நூல்களிலும் வாசித்திருந்ததின்மூலம், திருஸ்தலமென்பது மலிவான பொருட்களும், போலியான பல க்ஷேத்திரங்களும், வியாபாரங்களும் நிறைந்த ஒரு இடமென நினைத்திருந்தேன். ஆனால் அது எனக்கு அப்படித் தோற்றமளிக்கவில்லை. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசிகளும் கிறீஸ்துவும் அவரது சீடர்களும் ஒருக்கால் நடந்துசென்ற சரித்திரசம்பந்தமான அவ்விடங்களை நாங்கள் பார்வையிட்டுக்கொண்டே சென்றபோது பழையசரித்திரக் கதைகள் தத்ரூபமாக என் கண்முன் உருப்பெற்றன. நாங்கள் கர்மேல்மலைக்குச் சென்றபோது எலியாஸ் என்ற அம்மகா தீர்க்கதரிசியின் வரலாற்றை என் ஞாபகத்திலிருத்திக் கொண்டேன்.

நசரேத்தில் எங்கள் சிற்றுணவை முடித்துக்கொண்டு திருக்குடும்பம் வசித்துவந்த அச்சிற்றில்லத்திற்குச் சென்றபோது சூசையப்பரின் சுத்தியல் சப்தத்தையும், வாள் அறுக்கும் சப்தத்தையும் அங்கு கேட்பது போலிருந்தது. அத்தோடு குழந்தை யேசு மரச்சீவல்களை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்ததையும் கற்பனைசெய்து கொண்டேன். பின் கலிலேயாக் கடலை அடைந்தபோது நான் ஒருபடகில்—இராயப்பரின் படகில் இருப்பதாகவே உணர்ந்தேன். பின் கப்பர்னாவில் சேதமடைந்த தேவாலயத்தின்முன் வந்து நின்றபோது கிறீஸ்துநாதர் மாபெரும் உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்ததையும், பேய்பிடித்திருந்தஒருவனைக் குணப்படுத்தினதையும், இராயப்பரின் மாமியாரைக் குணப்படுத்தியதையும், இன்னும் ஏராளமானமீன்கள் அகப்பட்ட புதுமையையும், கிறீஸ்துநாதர் தம் சீடரை, மனிதரைப் பிடிப்பவர்களாகவேண்டுமென்றழைத்ததையும், மனக்கண்முன் கண்டேன். சுவிசேஷ சம்பவங்கள் ஒன்றும் உண்மையல்லவென்ற எண்ணத்துடன் நான் திருஸ்தலத்திற்கு வந்தேன். ஆனால் அங்குவந்த பத்துநாட்களில் அவநம்பிக்கை கொண்டிருந்த என்னிடம் எவ்வளவுமாற்றம்! யாவும் உண்மைதானெனக் கொண்டேன்!"

(தொடரும்)

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின்மூலமாயும் தேவமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் முதலிய அர்ச்சியசிஷ்டர்கள்மூலமாயும் நான்கேட்ட வரம் கிடைக்கப்பெற்றதால் நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

W. S. M. A. Fernando
Negombo


# திருச்சுரூபங்கள்! — — திருச்சுரூபங்கள்!!

## ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்டன.

அழகும் உறுதியும் உள்ளனவாய், கவர்ச்சிமிக்க நிறங்கொண்டனவாயுள்ள

## கிறீஸ்து இராசா சுரூபங்களும் இருதய ஆண்டவர் சுரூபங்களும்

விற்பனைக்கிருக்கின்றன.

விலை: 12 இஞ்சி ரூ. 15/- 16 இஞ்சி ரூ. 25/-
20 இஞ்சி ரூ. 35/- 24 இஞ்சி ரூ. 55/-

பார்சல் செலவு பிரத்தியேகம்

பழைய சுரூபங்களுக்கும் வர்ணம் தீட்டிக்கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு எழுதவும்

**தோமஸ் றொட்றிக்கோ அன் சன்ஸ்,**
சுரூப இறக்குமதியாளர்,
கொழும்பு 13.

Phone : 3489 — T'grams : "Religart"


## மாதோட்டப் புதினங்கள்

— நாட்டுத்தூதன் —

ஐயா காவலன் ஆசிரிய! இம்முறை இங்கு சித்திரை மாசத்தில் சீரான மழைபெய்து கொடாதுவிட்டபோதிலும் பிறஇடத்தில் பெய்த பெரும் மழையால் இந்நாட்டின் மகாகொடையாகிய கட்டுக்கரைத்தடாகம் ஓரளவுக்குச் சலத்தால் நிறையப்பெற்றிருக்கின்றது. இதனால் இம்முறை சிறுபோக வேளாண்மைச் செய்கை பெருவாரியாகச் செய்ய ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இம்முறை முன்பு செய்யப்படாத தூரமான இடங்களிலும் சிறுபோகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இச்செய்கை பலனளிக்கு மட்டும் போதியளவு நீர் கிடைக்குமோ வென்பது சந்தேகந்தான். சிலவேளை 1946-ம் ஆண்டிற்போல் அழிவுற்று அநியாயமாகிவிடுமோவெனவும் அஞ்சவேண்டியிருக்கின்றது. இது விஷயமாகக் கமக்காரரும் குசுகுசுத்துக் கொள்ளுவதினாலும் நீர்ப்பாய்ச்சல் பகுதியாரும் தகுந்த சிரத்தை எடுத்மக்கொள்ளுவார்களெனத் தூதன் நம்புகின்றான்.

தந்தி-தபால்வசதி:— இதுவிஷயமாகப் பெருங் கஷ்டப்பட்டுவந்த இப்பகுதி தற்போது போதியளவு வசதியுடையதாக மிளிர்கின்றது. முருங்கன், உயிலங்குளம், வங்காலை என்னுமிடங்களெல்லாம் தெலிபோனால் இணைக்கப்பட்டுவிட்டன. அடம்பன், விடத்தல்தீவு என்பவற்றிற்குத் தெலிபோன் ஸ்தாபிக்கும்வேலை ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இன்னும் பாப்பாமோட்டையில் ஒரு உபதபாற்கந்தோர் ஸ்தாபிக்கப்படுமென்று அரசாங்க அறிக்கை வெளியாகி இருப்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது.

நிருபருக்கு எச்சரிக்கை:— மன்னார் நிருபர் ஒருவர் 7-5-49 இல் வெளியான "டைம்ஸ்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில், மன்னார்ப் பட்டினத்திலுள்ள குமரன் படமாளிகையில் அப்பட்டிகையில் இருந்து 12 மைல் தூரமான இடத்திலுள்ள கன்னாட்டியில் வசிக்கும் பிரான்சிஸ் என்பவரின் மனைவி இரண்டாவது காட்சி முடிவில் அப்படமாளிகையிலேயே குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளாளென்னும் சுத்தப்பொய் ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கின்றார். "கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான்" என்பதுபோல், கண்ணாற் காணாத, அத்தாட்சியில்லாத, உண்மையாகவே அப்படி நடைபெறாத இதனை எவரோ ஒருவர் சொன்னதை நம்பி எம்நாட்டவரை அவமானப்படுத்தக்கூடியதாக எழுதியதையிட்டுத் தூதன் எச்சரிக்கை செய்கின்றான்.

மாந்தைக் கெபி:—பண்டைய மாதோட்டத்தின் மாணிக்கம்போல் ஒளிர்ந்த மாந்தையம்பதியில் நவமாக ஆரம்பிக்கப்பட்ட லூர்துகெபித் திருப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இதுவிஷயமாகச் சகல மாதாபக்தர்களும் ஒருங்குசேர்ந்து சிரத்தை எடுத்துத் தத்தம் தயாள குணங்களை ஏராளமாகக் காட்டி இக் கெபி கூடியகெதியில் பூரணமாய்க் கட்டப்பட்டு முடிவுறச்செய்வார்களாக.

சுபம்!

## 13,000 தோன் பர்மா அரிசி

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக பர்மா அரசாங்கம் 7,00,000 தொன் அரிசியும் உணவுப்பொருட்களும் ஒதுக்கியுள்ளது. ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளும் கையாளப்பட்டு வருவதாக அது செய்தி ஒன்று கூறுகிறது. குறிக்கப்பட்ட தொகை ஆனிமாத முடிவுக்குள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமாம். அது விநியோகம் செய்யும் அரிசித் தொகையின் விபரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. விபரம் பின்வருமாறு:— இந்தியா 31,000 தொன்; மலாயா 31,000 தொன்; இலங்கை 13,000 தொன்; ஷாங்காங் 5,000 தொன்; யப்பான் 3,000 தொன்; பிலிப்பைன் 3,000 தொன்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 2 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org